விலை ரூபாய் 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 புரட்டாதி 3 முறை 8 இதழ் 221
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 19 9-1985

## யாழ். நகரில் ஏற்பட்ட பரபரப்பு!

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் கோட்டையிலிருந்து இன்று காலை ஆயுதப் படையினர் வெளியே வந்ததைத்தொடர்ந்து யாழ். நகரில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

ஆயுதப்படையினர், படையின் வாகனமொன்றில் யாழ். தபால் நிலையத்தின் முன்பாக உள்ள வீதியால் பண்ணை நோக்கிச் சென்றபோது இரு வெடிச்சத்தம் கேட்டது. இதனைத்தொடர்ந்து பஸாரில் நின்ற மக்கள் நாலா பக்கமும் சிதறி ஓடினார்கள். வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டன. (ஈ)


சுண்டுக்குளி சீவ நூலகம்

டில்லியில்

தொடரும்

சந்திப்பு





# யுத்த நிறுத்தம் செய்ய

# ஈ. தே. வி. மு. இணக்கம்!

(புதுடில்லி)
இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக பல்வேறு அம்சங்கள் குறித்து இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியுடனும், இந்திய அரசு உயர் அதிகாரிகளுடனும் தொடர்ச்சியாக ஆலோசனை நடத்திவரும் ஈழ தேசிய விடுதலை முன்னணித் தலைவர்கள் யுத்தநிறுத்தத்துக்கு இணங்கியுள்ளனர். ஆயினும் இலங்கை அரசு ஒருதலைப்பட்சமாக அறிவித்திருக்கும் யுத்தநிறுத்த நீடிப்புக் குறித்து சந்தேகம் வெளியிட்டிருப்பதுடன் யுத்தநிறுத்தத்தை தாங்கள் மேற்கொள்வதற்கு இந்திய அரசிடம் உத்தரவாதம் கேட்டுள்ளனர்.

புதுடில்லியில் இப்பொழுது தங்கியிருக்கும் ஈழ தேசிய விடுதலை முன்னணித் தலைவர்களும் அவர்களது பிரதிநிதிகள் ஐவரும் நேற்று முன்தினம் இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தியை ஒன்றரை மணிநேரம் சந்தித்து இலங்கையின் தற்போதைய நிலைமை பற்றி விரிவாக எடுத்துக் கூறினர்.

யுத்த நிறுத்தம் முழுமையாகக் கடைப்பிடிக்கும் பட்சத்தில் தாங்களும் எதிர்நடவடிக்கையில் இறங்கப் போவதில்லை என்ற மேற்படி முன்னணியினர் இந்திய அரசுக்கு உறுதியளித்திருக்கும் அதே நேரத்தில்; இராணுவத்தினர் உட்பட ஆயுதப்படையினரும் 'பரா' துருப்புகளும், ஊர்காவல் படையினரும் பொது மக்கள் மீதும், தமிழ் அகதிகள் முகாம்கள் மீதும் தமிழ் அமைப்புக்கள் மீதும் தாக்குதல் மேற்கொள்ள விட்டால், தாங்களும் எதிர்தாக்குதல் மேற்கொள்ளப்போவதில்லை என்றும் இதற்கு இந்திய அரசு உறுதிமொழி அளிக்க வேண்டும் என்றும் இந்திய அரசை கோரியுள்ளனர்.

(5 ஆ பக்கம் பார்க்க)

## நிதிசேகரிப்பில் சம்பந்தமில்லை

(யாழ்ப்பாணம்)
திருமலை, வவனியா மாவட்டங்களில் இடம் பெற்ற வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்கென, தமிழ்ப் பகுதிகளிலுள்ள எந்த ஒரு இடத்திலும் நிவாரண உதவிக்காக நிதி சேகரிக்கும் நடவடிக்கையில் யாழ் பல்கலைக்கழக மாணவரவை ஈடுபடவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## மூவர் படுகொலை!

(மன்னார்)
மன்னார் மாவட்டத்தில் கள்ளிக்குளம் எனுமிடத்தில் மூவர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

வெள்ளையன் (22 வயது) அவரது மனைவி 19 வயது) முத்து (16 வயது) ஆகிய மூவரும் வெட்டு மற்றும் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் இறந்து கிடக்கக்காணப்பட்டனர்

## டாக்டர்கள் பற்றாக்குறை எதிரொலி!

(யாழ்ப்பாணம்)
யாழ் அரசினர் ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் பற்றாக்குறையினால் வெளிநோயாளர் பகுதியில் நோயாளர் தொகை குறைக்கப்பட்டுள்ளது

தினமும் காலையில் 600 பேரும் மாலையில் 200 பேர் மட்டுமே டாக்டரினால் பரிசோதிக்கப்படுவார்கள்

டாக்டர்கள் பற்றாக்குறை காரணமாக தற்போது ஒரே 'கியூ'வில் தான் ஆண்களும், பெண்களும் செல்கின்றார்கள். (ஈ)

## வவனியா காணி சுவீகரிப்பு: நஷ்டஈடு வழங்கப்படுமாம்!

(இ பெஞ்சமின்)
வவனியாவில் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்ட 505 ஏக்கர் காணியின் சொந்தக்காரர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படுமென்று ஆயுதப்படை களின் இணைப்பதிகாரி பிரிகேடியர் ரணதுங்கா தெரிவித்துள்ளார்.

முப்படைகளின் பிரதம இணைப்பதிகாரி பத்திரிகையாளர் மாநாடொன்றை

(5-ம் பக்கம் பார்க்க)

## பலாலியிலும் காணி சுவீகரிப்பு

(யாழ்ப்பாணம்)
பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்காக அதன் சுற்றுப் புறமாகவுள்ள குறிப்பிட்ட அளவு தனியார் காணிகளை அரசாங்கம் சுவீகரிக்கவுள்ளதாகத் தெரியவருகிறது. பாதுகாப்புக் காரணங்களுக்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரியவந்துள்ளது.

ஏற்கனவே சில தனியாரின் காணிகள் சுவீகரிக்கப்பட்டதுடன் வீடுகளும் சில தகர்க்கப்பட்டது தெரிந்ததே. (மா)

## சத்திரசிகிச்சை உபகரணங்கள் ஒப்படைக்கப்பட்டன!

(யாழ்ப்பாணம்)
யாழ். ஆஸ்பத்திரி சத்திர சிகிச்சை கூடத்திலிருந்து இனந்தெரியாத நபர்களால் எடுத்துச்செல்லப்பட்ட முக்கிய மூன்று உபகரணங்களும் திரும்பவும் அப்படியே ஒப்படைக்கப்பட்டுள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரம் தெரிவித்துள்ளது.

ஆஸ்பத்திரியின் நலன் கருதியும், தமது வேண்டுகோளை ஏற்றும் வைத்திய உபகரணங்களை ஒப்படைத்தவர்களுக்கு வைத்திய அதிகாரி பாராட்டுத் தெரிவித்துள்ளார். (மா)

# வரி விளம்பரம்

## தேவை

பண்டத்தரிப்பில் பிரத்தியேக வகுப்புகள் நடத்துவதற்கு உகந்த வீடு, பிரத்தியேக வகுப்புகள் நடத்துவதற்கு உகந்த வீடு, பிரதான வாகன போக்குவரத்து வீதியில் தேவை. தொடர்பு: விளம்பர இல 757 C/o ஈழநாடு. யாழ்ப்பாணம். 757

### பயிற்சி

டிரான்ஸ்மென் பயிலுனர், ரிவி. ரேடியோ, எலக்ரிக்கல் வயரிங், தொழிட்நுட்பம், தட்டச்சு, சுருக்கெழுத்து NCE பரீட்சைக்கான ஆங்கில வகுப்புக்கள் 19-9-85-ல் ஆரம்பமாகின்றன. விபரங்களுக்கு, தொடர்பு கொள்க. பதிவாளர் Institute of Technical Studies V. C. முன்பாக வட்டுக்கோட்டை. 778

## மணப்பந்தல்

மனதிற்குகந்த வாழ்க்கைத் துணையை கஷ்டமின்றி தேடிக் கொள்ள எமது திருமண சேவையை நாடுங்கள். நியாயமான கட்டணம், நம்பகமான சேவை ஷாஹி ஷீபான் ஏஜென்ஸீஸ். 125, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம். 663

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

சண்டிலிப்பாயைச் சேர்ந்த சுந்தரேஸ்வரி மகள் தர்மவதனியின் மரணசாதன மற்ற மரணச்சொத்துவிடயமாக.

—இறந்தவர்

இல, T. 221

சபாபதிப்பிள்ளை சுந்தரமூர்த்தியும் பெண் மகேஸ்வரியும் சண்டிலிப்பாய்,

—மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்தவரின் மரணச்சொத்தை நிருபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுளளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985ம் ஆண்டு தை மாதம் 9ம் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக் கட்டளையை ஏன் முற்றுன கட்டளையாக்கப்படலாகா தென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1974ம் ஆண்டு ஐப்பசி மாதம் 18ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி,
ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்.

தயாரிப்பு:
எம். கே. ஆனந்தம்
மனுதாரின் சட்டத்தரணி.
8-7-85

காரணம் காட்டும் திகதி 25-9-85க்கு நீடிக்கப்பட்டது.
ஆழ்வார் சிவபாதசுந்தரம்,
பதிவாளர். 754

## விற்பனைக்கு

பருத்தித்துறை நெல்லண்டை உடையார் ஒழுங்கையில் 3, 4 பரப்புக்களாகத் துண்டிடப்பட்ட பதினன்கு துண்டுகள் (மின்சார. குடிநீர் வசதியுமுள்ளது) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சிவா. கிருஷ்ணமூர்த்தி, உடையார் வளவு, நெல்லண்டை, பருத்தித்துறை (789)

## சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

பெரிய அரசடி சாவகச்சேரி காலஞ்சென்ற நாகமணி யோகராசா பெண் சாந்தினி (சரவணை மகள்) என்பவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்தும் உடமைப் பொருட்களினதும் விடயத்தில்.

மரணமெய்தியவர்.
நாகமணி யோகராசா,
பெரிய அரசடி, சாவகச்சேரி,

மனுதார்

இல: 229
சொத்துறுதிசார்

எதிராக

1. யோகராசா மகள் சுதர்சனு (பராயமற்றவர்)
2. யோகராசா கௌரி நிதார்சன் (பராயமற்றவர்) அவர்களின் வழக்குக் காவலன்.
3. சரவணை நாகமணி மூலமாக-எகிலோரும் பெரியஅரசடி, சாவகச்சேரி,

எதிர்வாதிகள்

### பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

மேற்படி வழக்கு மேற்கூறப்பட்ட இறந்தவரின் மரணச்சொத்து நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரும் 1985ம் ஆண்டு புரட்டாதி மாதம் 23ம் திகதி நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னிலையில் தோன்றி அப்பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப் படலாகாது என்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1985ம் ஆண்டு புரட்டாதி மாதம் 17ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி,
ஆ. குணநாயகம்,
பதிவாளர்,

தயாரித்தவர்:
எஸ். கந்தசாமி ஜே.பி யுஎம்.
மனுதாரின் சட்டத்தரணி.
786

## நேர்முகப்பரீட்சை

(மண்டைதீவு)

யாழ் பல் தொழில் நுட்பக் கல்லூரியில் இவ்வருடம் ஆரம்பிக்கப்படவுள்ள பயிற்சிநெறிகளுக்கான நேர்முகப்பரீட்சைகள் இம்மாதம் முதல் நடைபெற்றுவருகின்றன.

சகல தொழில்நுட்பவியலுக்குமான பயிற்சிநெறிக்கு பயிற்சியாளர்களைத் தெரிவதற்காக இப்பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன.

## படகு விபத்து: இருவர் பலி?

(யாழ்ப்பாணம்)

இராமேஸ்வரத்தில் அகதியாக இருந்து யாழ். வந்த தொல்புரம் கிழக்கைச் சேர்ந்த இளைஞரொருவரைக் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இவருடன் கடந்த 4ம் திகதி ஆறுபேர் பிரயாணம் செய்ததாகவும், இவர்கள் வந்த படகு விபத்துக்குள்ளான போது சிலர் தப்பியதாகவும் இருவர் மரணமானதாகவும் நம்பப்படுகிறது. (ச)

### பரிசு பெறுவோர்

பண்ணாகம் ஸ்ரீமுருகன் இந்து சமய விருத்திச் சங்கத்தினர் நடாத்திய அதிர்ஷ்ட லாபச் சீட்டு இழுப்பில் பரிசுபெறும் இலக்கங்கள்: 881, 538, 284, 312, 580, 36, 611, 583, 813, 167, 42, 04, 287. இவ் எண்களையுடைய பரிசுக்குரியவர்கள் 30-9-85க்கு முன்னர் செயலாளருடன் தொடர்புகொள்ளவும்.

செயலாளர்.
(790)

## மூளை வளர்ச்சி நம்பிக்கை நிதியம்

கரு உற்பத்தியடைந்த காலந்தொட்டு மூன்று வயது வரை ஒரு குழந்தையின் மூளை 80% வீதம் வளர்ச்சியடைகிறது. இக்குறுகிய காலத்தில் ஒரு குழந்தைக்குத் தேவையான சத்துணவை ஊட்டாவிடில் அதனல் ஏற்படும் குறைபாடு மூன்று வயதின் பின் எவ்வளவுதான் அதிகமான சத்துணவை ஊட்டினலும் மூளை வளர்ச்சி குன்றியே இருக்கும். இதனைத் தடுப்பதற்கு குழந்தைகளுக்குப் பால்மா வழங்கும் திட்டம் போஷாக்குக் குறைந்த சிறுவர்களுக்கு ஆரம்பிக்கப்படவிருக்கின்றது. முதலில் 2, 3, 4, 5, வட்டாரங்களிலுள்ள சிறுவர்களுக்கு ஆரம்பித்து, இத்திட்டம் வெற்றியடையுமாயின் மற்றைய வட்டாரங்களுக்கும் விஸ்தரிக்கப்படும். இக்குறிப்பிட்ட வட்டாரங்களில் குறைந்த வருவாயுள்ள குடும்பங்களிலிருந்து 500 சிறுவர்கள் உளர். இவர்களுக்குச் சராசரி மாதத்திற்கு ரூபா 50/-க்கு பால்மா தேவைப்படும். (மற்றைய உணவுகளுடன் சேர்த்துப் பாலும் கொடுப்பதற்கு) இத்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு அன்பளிப்புச் செய்ய விரும்புவோர் தயவு செய்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

திர்வாகக்குழு,
மூளை வளர்ச்சி
நம்பிக்கை நிதியம்,
மே/பா. மாநகர ஆணையாளர்
மாநகராட்சி மன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

இச்செலவினத்தைத் தத்தெடுக்க விரும்புவோர் ஒவ்வொருவருக்கும் ஒரு பிள்ளை தெரிவு செய்யப்பட்டு அவர் செலுத்த வேண்டிய முழுத்தொகையும் அறிவிக்கப்படும்.

(ஒப்பம்)
சி. வி. கே சிவஞானம்
ஆணையாளர்,
மாநகராட்சி மன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சிமன்ற அலுவலகம்,
இந்து விடுதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
12-09-85. 788

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுள்ளது)

### வெற்றுச் சாக்கு கேள்வி அறிவித்தல்

எமது சங்கத்தில் 5000 வெற்றுச் சாக்குகள் கேள்வி மூலம் விற்பனைக்கு உண்டு.

சாக்குகளின் வகைகள்:

அரிசி சாக்கு - 67 கிலோ
அரிசி சாக்கு - 50 கிலோ
மா சாக்கு - 67 கிலோ
மா பை - 67 கிலோ
சீனி சாக்கு - 50 கிலோ
சீனி பை - 50 கிலோ
சில்லறை

கேள்வி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் முடிவுத் திகதி 24-9-85

பதில் பொதுமுகாமையாளர்
127, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்,
17-9-85.
(792)

## பண்டத்தரிப்பு சந்தையில் சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு சந்தையில் சைக்கிள் திருட்டு அண்மைக் காலமாக அதிகரித்து வருவது குறித்து அப்பகுதி மக்கள் பெருங்கவலை தெரிவித்துள்ளனர்.

சைக்கிள்களை பூட்டிவிட்டு பொருட்களைவாங்க சந்தைக்கு செல்பவர்கள் திரும்பி வந்து பார்க்கும்போது பூட்டப்பட்ட சைக்கிள்கள் மாயமாய் மறைந்து விடுகின்றனவாம்.

அண்மையில் பெறுமதிமிக்க சைக்கிளை பறிகொடுத்த முதியவரொருவர் அதிர்ச்சியில் சந்தையில் மயங்கி விழுந்து விட்டதாகவும் கூற படுகிறது. சைக்கிள் திருட்டு குறித்து பொதுமக்கள் விழிப்பாக இருக்கவேண்டுமென சந்தை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச)

## ஆசிரியர்கள் தேவை

வசதிக்கட்டணத்திலிருந்து பின்வரும் ஆசிரியர்கள் தேவை.

முடிவு திகதி — 25-09-1985

1. க. பொ. த. (உ. த) வகுப்புகளுக்கு வர்த்தகமும் நிதியியலும், கணக்கியல் கற்பிக்க வர்த்தக பட்டதாரி.
2. 6 — 10 தரங்களுக்கு நடனம் கற்பிக்க ஆசிரியை:

அதிபர்,
யா / நடேஸ்வராக்கல்லூரி,
காங்கேசன்துறை. (784)

## மானிப்பாய் இந்துக்கல்லூரி

பழைய மாணவர் சங்கம

### வருடாந்த பொதுக்கூட்டம்

திகதி: 20-10-1985 ஞாயிறு
இடம்: வாகீசர் மண்டபம்
நேரம்: காலை 10-00 மணி பொதுக்கூட்டம்

பிரேரணைகளும். மனுக்களும் 5-10-1985 பிற்பகல் 1-00 மணிக்கு முன் செயலாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

சி. பத்மநாதன்,
செயலாளர்,
மானி. இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்.
'வனசா', மானிப்பாய். (764)

## இலங்கைப் பல்கலைக்கழக

வெளிநிலைப் பாடநெறிகள்

பாடநெறி — சட்டம் (LL. B)

பல்கலைக்கழகத்தில் பதிவு செய்வதற்கான இறுதித் தினம் — 30-9-85

தகமை: க. பொ. த (உயர்தரம்) விரிவிரைகள் ஆரம்பமாகிவிட்டன.

விபரங்களுக்கு:
பதிவாளர்,
யாழ். சட்டக் கல்வி நிலையம்,
மின்சாரநிலைய வீதி. யாழ்ப்பாணம். (781)

## 1-வது பிறந்தநாள் வாழ்த்து

19-9-84

### பௌ(F)சுல் நி(F)ப்ராஸ்



9, 1-ம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம் கலீல்—ஹமீதா பானு தம்பதிகளின் செல்வப் புதல்வன் பௌ(F)சுல் நி(F)ப்ராஸ் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று தமது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகிறார். இவரை உம்மா, வாப்பா. இஸ்மி ராத்தா, ஜன்ஸி ராத்தா, ஸய்ரா ராத்தா, உம்மம்மா, அப்பா, பூட்டிமா மற்றும் உற்ரார், உறவினர், நண்பர்கள். அல்லஹ்வின் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகிறார்கள். (793)

## ★ ஹெலிகாப்டரில் சென்ற சோவியத் - ஆப்கான்
# இராணுவ உயர் அதிகாரிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்!

இஸ்லாமாபாத், செப்-18

சோவியத் - ஆப்கான் இராணுவ உயரதிகாரிகளை ஏற்றிச் சென்ற யுத்த ஹெலிகாப்டர் விமானமொன்று ஆப்கானிஸ்தான் கிளர்ச்சியாளர்களால் சுட்டு வீழ்த்தப்பட்டது. எட்டுப் பேர் இத்தாக்குதலில் கொல்லப்பட்டதுடன், அந்த ஹெலிகாப்டரும் நாசமாக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

தலைநகரான காபூலில் இருந்து பக்தியார் என்ற பகுதிக்கே இந்த ஹெலிகாப்டர் சென்றுகொண்டிருந்தது. அப்போது ஷாவ்வா என்ற மலைப் பகுதியில் வைத்தே இது சுடப்பட்டதாகக் கூறப்பட்டது.

'எம். ஐ-24' என்ற இந்த ரஷ்ய ஹெலிகாப்டர் இயந்திரத் துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட கனமான உருபடியைக் கொண்டதாகும்.

இவர்களுடன் 2 சோவியத் இராணுவ சிப்பாய்களுட்பட 8 ஹெலிகாப்டர் சிப்பந்திகளும் அதிலிருந்தனர்.

ஹெலிகாப்டர் சுடப்பட்டதும் அதிலிருந்த அனைவரும் தீப்பிடித்துக் கருகி மாண்டனரென்று தெரிவிக்கப்பட்டது.

பக்தியார் பகுதியில் சோவியத் - ஆப்கானிஸ்தான் துருப்புகளுடன் ஆப்கான் கிளர்ச்சியாளர்கள் மோதலில்

ஆப்கானிஸ்தான் இராணுவத்தின் பிரிகேடியர், மற்றும் ஒரு மேஜர் ஜெனரலும், சோவியத் இராணுவத்தின் உயர் அதிகாரி ஒருவரும் இந்த ஹெலிகாப்டரில் இருந்தனர்.

இறங்கியுள்ளனர். கடந்த வாரம் முதல் தீவிரமாக இந்த யுத்தம் இடம்பெற்று வருகின்றது எனவே இதனை மேற்பார்வையிடுவதற்காகவே அந்த இராணுவ உயரதிகாரிகள் குழு சென்றுகொண்டிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

ஆப்கானிஸ்தானின் சோவியத் சார்பு அரசாங்கத்திற்கு எதிராகவும், சோவியத் துருப்புகளுக்கு எதிராகவும் ஆப்கானிஸ்தான் முஜாஹதீன் கிளர்ச்சியாளர்கள் 1980ம் ஆண்டு முதல் தாக்குதல் நடவடிக்கைகளில் இறங்கியிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## 100 மாபியா குற்றவாளிகளுக்கு தண்டனை

ரோம், செப். 18

இத்தாலியில் சுமார் 100 மாபியா பயங்கரவாத இயக்கத்தினர் கைது செய்யப்பட்டு கடுந் தண்டனைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

நேப்பிள்ஸ் நகர நீதிமன்றம் இத்தண்டனையை விதித்தது. பொப் பாடகர்கள், நடிகர்கள், மற்றும் பிரபல புள்ளிகள் பலரும் இந்த மாபியா கும்பலில் அங்கம் வகிக்கின்றனர்.

போதைவஸ்துக் கடத்தல், ஆயுதக் கடத்தல், கொலை மற்றும் பயங்கரவாதச் செயல்களுடன் இந்த இயக்கத்தினர் தொடர்பு கொண்டிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ)

## "விண்வெளி ஆயுத பரிசோதனைகளை அமெரிக்கா நிறுத்தாது!" – றீகன்

வாஷிங்டன், செப் 18

"விண்வெளி ஆயுத பரிசோதனைகளை அமெரிக்கா நிறுத்தமாட்டாது" என்று அதிபர் திரு. ரொனால்ட் றீகன் தெரிவித்தார்.

வாஷிங்டனில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர்கள் கூட்டமொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"அமெரிக்கா விண்வெளியில் இராணுவ ஆயுதபாவனைகள் குறித்து விரிவான ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளது. இந்த ஆராய்ச்சிகள் அமெரிக்காவின் எதிர்காலப்பாதுகாப்புடன் சம்பந்தப்பட்டவை. எனவே இதனை நிறுத்தமுடியாது" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

திரு றீகனின் சோவியத் தலைவர் கோர்பச்சேவுடனான சந்திப்புக் குறித்தும் கேட்கப்பட்டது. அப்போது அவர் சொன்னதாவது "யுத்தப் பயமுறுத்தல்கள் குறித்து உலகம் கொண்டுள்ள அச்சத்தை நீக்க இச்சந்திப்பு வழியமைக்கும்" என்றார்.

சோவியத் யூனியனின் அணு ஆயுத ஏவுகணைகள் குறித்த தகுந்த காரணங்கள் இல்லாமல், அந்த ஆயுதங்கள் குறித்தும் எத்தகைய தீர்மானங்களையும் எடுக்கப்போவதில்லையெனவும் அவர் குறிப்பிட்டார். (இ)

## ஐ. நா. 40-வது ஆண்டு பொதுக்கூட்டம் ஆரம்பம்

நியூயோர்க், செப்-18

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் 40-வது பொதுக் கூட்டம் நேற்று ஆரம்பமானது

மூன்று மாத காலம் இக்கூட்டம் நீடிக்கும் 80க்கும் அதிகமான உலகத் தலைவர்கள் இக்கூட்டத் தொடரில் கலந்து கொள்வார்கள்.

ஐ நா. பொதுச் சபையின் இந்த ஆண்டுக்கான தலைவராக ஸ்பெயின் ராஜதந்திரி திரு. ஜெய்ம் டெபினியா தெரிவு செய்யப்பட்டார். கடந்த ஆண்டு ஸாம்பியாவைச் சேர்ந்த திரு போல் லுசாக்கா தலைவராக இருந்தார்

ஆயுதக் கட்டுப்பாடு, தென்னாபிரிக்க இனஒதுக்கல் ஆகிய விடயங்களே இந்த ஆண்டு பொதுக்கூட்டத்தின் தனிப் பொருளாக இருக்குமென்றும் தெரிவிக்கப்பட்டது

"தற்போதைய உலகசவால்களிலிருந்து ஐ நா ஸ்தாபனத்தைக் காப்பாற்ற வேண்டும். இல்லையேல் இத்தாபனம் மறைந்துபோய்விடும்" என்ற புதிய தலைவர் திரு. டெபினியா தெரிவித்தார்.

வல்லரசுகளின் ஆயுதப் போட்டியை அவர் கண்டித்ததுடன் தென்னாபிரிக்க இன ஒதுக்கல் கொள்கையையும் கடுமையாக விமர்சித்தார். (இ)

# உலகச் செய்திகள்

## லொறிகள் மறிக்கப்பட்டு கொள்ளை

(வவுனியா)

வவுனியா - ஹொறவப் பொத்தானை வீதியில் கடந்த சனிக்கிழமை பகல் 7ம் கட்டை என்ற இடத்தில் வவுனியாவிலிருந்து சென்ற லொறிகள் வழிமறிக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

சிங்கள, முஸ்லிம் வர்த்தகர்களே கொள்ளையரின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

கட்டை போட்டு வாகனங்கள் மறிக்கப்பட்டு, பணம், மணிக்கூடுகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது என தெரியவருகிறது

துப்பாக்கி சகிதம் 7பேர் கொள்ளையினை நடத்தியுள்ளார்கள்

# உத்தரவாதமற்ற யுத்த நிறுத்தத்தைஏற்கமுடியாது!

## ஈ. தே. வி. மு. அறிவிப்பு!!

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி தம்மோடு மிகுந்த அனுதாபத்துடன் பேச்சுவார்த்தை நடத்தினார் என்று இலங்கைத் தமிழ்த் தீவிரவாதக் குழுக்களின் ஈ. தே வி முன்னணி உறுப்பினர்கள் தெரிவித்தனர்

ஈ தே வி முன்னணியினர் நேற்று புதுடில்லியில் சுமார் 90 நிமிடநேரம் பிரதமர் காந்தியைச் சந்தித்தனர்.

ஈ தே வி முன்னணியினர் நிரந்தர போர் நிறுத்தம் குறித்தும் திரு. காந்தியுடன் ஆராய்ந்தனர் அப்போது அவர்கள் இலங்கை அரசின் தகுந்த உத்தரவாதமற்ற நிரந்தர யுத்தம் குறித்து அச்சம் தெரிவித்தனர்.

கடந்த யுத்தநிறுத்த காலப் பகுதியில் இலங்கை அரசு பலதடவை இந்த யுத்த நிறுத்தத்தை மீறியுள்ளதையும், தொடர்ந்தும் மீறி வருவதையும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இதனைத் தொடர்ந்தே இந்த உத்தரவாதமற்ற யுத்தநிறுத்தத்தைத் தம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாதென்று அவர்கள் குறிப்பிட்டனர்

பிரதமர் திரு ராஜீவ்காந்தி ஈ. தே. வி. முன்னணியினரின் விளக்கங்களை மிகுந்த அனுதாபத்துடன் கேட்டறிந்தார் என்று தெரிவிக்கப்பட்டது

ஈழ தேசிய விடுதலை முன்னணியைச் சேர்ந்த எல் ரி. ரி ஈ சார்பில் வே பிரபாகரன் திலகர், சுப்பிரமணியம் ஆகியோரும் 'ரெலோ' சார்பில் ஸ்ரீசபாரத்தினம். ஈரோஸ் சார்பில் இரத்தினசபாபதி ஆர் பாலகுமார், மற்றும் ஈ பி ஆர் எல் எவ் சார்பில கே. பத்மநாபா ஆகியோரும் கலந்துகொண்டனர் இச்சந்திப்பின்போது திரு ஆர் பாலகுமார் இம்முன்னணிக்குத் தலைமை தாங்கினார்.

ஈ தே வி.மு புதுடில்லியில் தங்கிநின்று வெளியுறவுச் செயலர் திரு ரொமேஷ் பண்டாரியுடன் தொடர்ந்துபேச்சுக்களை நடத்துவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமும், தமிழர் விடுதலைக் கூட்டணியும் இச்சந்திப்பில் பங்குபற்றவில்லை. இவர்கள் விரைவில் பிரதமர் ராஜீவைச் சந்திப்பார்கள் என்று கூறப்பட்டது, (இ)

## பேர்மிங்ஹாமில் ஆசிய பாதுகாப்புச் சங்கம்!

லண்டன் செப். 18

லண்டனின் பேர்மிங்காம் நகரில் ஆசிய நாட்டவர்களின் பாதுகாப்புக்கென சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான் மற்றும் ஆசிய நாட்டார் இதில் அங்கத்தவர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்

கடந்த வாரம் பேர்மிங்காம் நகரில் ஆசிய நாட்டவர்களுக்கெதிராக வெள்ளை, கறுப்பின இளைஞர்கள் கலவரங்களில் ஈடுபட்டனர்.

இக்கலவரங்களில் பல கட்டிடங்கள் வாகனங்கள் என்பன கடுமையாகச் சேதப்படுத்தப்பட்டன. பல கோடிக்கணக்கான ரூபாய் சேதமேற்பட்டது.

இந்தச் சேதங்களுக்கு சுமார் 2 கோடி ஸ்டேர்லிங் பவுண்களை நஷ்டஈடாகத் தரும்படி பேர்மிங்ஹாமிலுள்ள ஆசிய சமூகத்தவர்கள் பிரிட்டிஷ் அரசைக் கோரியிருந்தனர்

புதிய ஆசிய பாதுகாப்பு சங்கத்தில் பேர்மிங்ஹாமிலுள்ள ஆசியநாட்டவர்கள் தமது பாதுகாப்புக்குரிய அனைத்து விடயங்களையும் ஆராயலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (இ)

## மற்றுமொருவர் பலி!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு இலுப்பைச் சேனை என்னுமிடத்தில் சுமார் 30 வயதுள்ள ஒருவர் இரகசியப் பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரா-மா)

## கொழும்பு தனியார் பஸ் சேவை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ் - கொழும்பு தனியார் பஸ்சேவைகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன அண்மைக் காலங்களில் வவுனியாவிற்கும் மதவாச்சிக்குமிடையே இடம்பெற்ற சில அசம்பாவிதங்களைத் தொடர்ந்து தனியார் பஸ்சேவை இடை நிறுத்தப்பட்டிருந்தது தெரிந்ததே.

இவ் அசம்பாவிதங்கள் குறித்து மேலிடங்களுக்கு புகார் செய்துள்ள போதும் அவை பூரணபலனளிக்கவில்லையென கூறப்படுகிறது தற்போதும் பிரயாணிகள் இடையிடையே சோதனை செய்யப்பட்டு வருகின்றனராம்

இச்சோதனைகளில் அதிக நேரம் செலவிடப்படுவதால் வழமையாக மாலை 4-30 மணிக்கு கொழும்பை அடைய வேண்டியபஸ் மாலை 7மணிக்குக் கூட அடைவதில்லையாம். (ச)

**மணிவாக்கு**

கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க்கணி;

— குறள்

# நமது நோக்கு

## தமிழ்ப் போராளிகள் தலைவர்களுக்கு

கிரேக்க ஞானி சாக்கிரட்டீஸை ஒரு நாள் ஓர் அற்பன் காலால் உதைத்து விட்டான். அதைக்கண்ட நண்பன் ஒருவனுக்கு சினம் பொங்கியது! சாக்கிரட்டீஸ் பொறுமையாக இருந்தார். வாயைத் திறக்கவில்லை. முகத்தைச் சுளிக்கவில்லை.

அவர் நண்பனுக்கோ அந்த அடாத செயலைக் கண்ட பிறகு நிலைகொள்ளவில்லை! ஒரு கழுதை என்னை உதைத்தால், அதை நான் திருப்பி உதைப்பேன் என்று நினைக்கிறாயா நண்பா? என்றார் ஞானி சாக்கிரட்டீஸ்.

சினத்திற்கு இடம்கொடுத்தால், மனம் இறங்கிப்போவது இயற்கை. இதனை அறிவதற்கு உளவியற்புலமை தேவையில்லை.

பரபரப்பும் பதற்றமும் துணிவை உண்டாக்கா என்பது எந்த போராளியினதும் சாதாரண அனுபவம் "எதனையும் பரபரப்போடு தெரிந்துதான் ஆகவேண்டும் என்பன எதுவும் கிடையாதென்றுதான் எண்ணுகிறேன்" என்கிறார் தத்துவ ஞானி சாக்கிரட்டீஸ்.

உலகம்கண்ட மாபெரும் ஞானி சாக்கிரட்டீஸின் சினமற்ற ஆழமான சிந்தனைகளை நாம் குறிப்பிடுவதற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு.

நீதிமன்றத்தில் குற்றவாளி என்று காணப்பட்டு, கொலைக்குத் தீர்த்தபோது, அவர் மன்னிப்புக்கேட்க- கிரேக்க இளைஞர்களுக்குத் தவறான கருத்துக்களை கற்பித்தாரென்று ஒப்புக்கொண்டு-மறுத்துவிட்டார். எனவே அவரைக்கொல்ல நஞ்சு வழங்கப்பட்டது பல நண்பரின் வேண்டுகோளை மறுத்து நஞ்சருந்தி அழியா வாழ்வுபெற்றார்.

போராளியென்றால் எதிரியின் உத்தேச போர்த் திட்டங்களை மணந்து பிடித்துத் தவிடு பொடியாக்குவதோ, அல்லது துப்பறிந்து எதிரிகளை எதிர்பாராதவிதத்தில் முறியடிப்பதோ என்று நினைப்பது வழக்கம்.

நேருக்கு நேர் போரில் வெற்றிகண்டபோதும் போராளியின் புருஷ லட்சணம் இதற்கு மேலான பண்பில் தங்கியிருக்கிறது.

மரணத்துக்கு அஞ்சாது தனது உயிரைத் தியாகம் செய்யும் உண்மைப் போராளி, தன் உடம்பின் அழிவுடன் தான் அழிந்து விடுவதாக நம்புவதில்லை

தன் உயிரையும் மன்னுயிரையும் மிகப் பெரிதாக மதிப்பதால்தான் தன் உயிரைக் கொடுக்கத் தயாராகிறான். எதற்காக?

அந்த நோக்கம் உயிரிலும் அரிதென்பது சொல்லாமலே விளங்கும்.

எனவே, தமிழ் இளைஞர்கள் தொடங்கிய ஆயுதப் போராட்டம் பயங்கரவாதமென்பது அரசின் அர்த்தமற்ற வியாக்கியானம்.

போராளிகள் பயங்கரவாதிகளா? பயங்கர சாதனைகள் பல புரிந்து உலகின் கவனத்தை ஈர்த்திருப்பது உண்மை.

பயங்கரவாதிகள் எவ்வாறு புதுடில்லிக்கு - அதுவும் பாரதப் பிரதமரால் அழைக்கப்பட்டு இலங்கை அரசின் பிரதிநிதிகளைச் சந்திக்க முடியும்? தமிழர் பிரச்னை வேறு; பஞ்சாப் பயங்கரவாதம் வேறு.

தமிழர் சுதந்திர வாழ்வுக்குப் பாதகமான அரசுடன் போராடி - ஆயுதம் ஏந்தி- அவர்களுக்குரித்தான சுதந்திரத்தைப் பெறுவதே தமிழ் இளைஞர்களின் தனிநோக்கம். இதனை அவர்களோ, வேறெவர்களோ மறக்கப்படாது.

இந்த நோக்கத்தை நிறைவேற்றும் பரீட்சையில், போர் நிறுத்தம், சமாதானப்பேச்சு என்ற முக்கிய கட்டம் ஏற்பட்டிருக்கிறது. போரில் பிரத்தியட்சமான வீரம், சமாதானப் பேச்சில் 'பணிவு' என்ற பண்பு உருவெடுக்கவேண்டும்.

வீரனுக்கே பணிவு உரித்தான சொத்து. கோழைக்கேது பணிவு? எனவே எந்த நெருக்கடியான நிலையிலும் சினம் கொள்ளலாகாது. ஆழ்ந்து சிந்திக்கும்போது சினத்துக்கு இடமில்லை.

கொதிப்படைந்த நிலையில் "அன்பர்களே, எமக்கு இப்போது வெப்பம் தேவையில்லை; வெளிச்சந்தான் தேவை" என்று ஒரு அமெரிக்க ஜனாதிபதி சொன்னது நினைவிற்கு வரட்டும்.

எனவே 'பயங்கரவாதிகள்' என்ற வடு நீங்கி, இயக்கங்கள் அனைத்தும் "ஈழ தேசிய விடுதலை முன்னணி" என்ற கொற்றக் குடையில் வரவேற்கப்படும் காட்சி மகத்தான காட்சி என்பதை உலகறியும்.

இதனைக் குழப்பிவிட 'கண்ணிவெடிகள்' எங்கும் ஏராளம், அவற்றிலிருந்து தப்பும் திறமையுடைய இயக்கங்கள் அனைத்தும் சமாதானத்தின் வெற்றியை மிகப் பெரிதாகக் கொள்ள வேண்டும்.

மக்கள் விரும்பும் சமாதான வாழ்வும், எமது இளஞ் சமூகத்தின் புனரமைப்பும் பெரும் பொறுப்புக்களாக இன்றைய பேச்சுக்களில் முதலிடம் பெற வேண்டும்.

போலித் திட்டங்களும், வஞ்சனைத் தந்திரங்களும், இன்று உலகை அதிரவைத்த வீரச் சாதனைகளுக்குப் பொருத்தமற்றவை.

ஆறுத் தலைவர்கள் அனைவரும் பேதங்களை நீக்கி ஒரு குரலில் முடிவு காணவேண்டும்.

எத்தனை இயக்கங்கள் என்றாலும் என்ன? விடுதலை என்பது பிரிக்கப்படாத ஒரு முழுமையான லட்சியம்.

# வவனியா காணி சுவீகரிப்பு:

## கைவிடுமாறு கூட்டணி வலியுறுத்தும்

(வவனிய)

வவனியா விமானப்படைக்கு 504 ஏக்கர் காணி சுவீகரிக்கப்படுகின்ற விஷயம் தொடர்பாக சென்னையில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் வவனியாவிலுள்ள முக்கிய பிரமுகர்களுடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு இந்தக் காணிகள் சுவீகரிப்பு பற்றிய விபரத்தை கேட்டறிந்துள்ளார்.

இந்தச் சுவீகரிப்பு திட்டத்தை கைவிடும்படி அரசாங்கத்தை வற்புறுத்தப் போவதாக அவர் தெரிவித்ததாக கூறியப்படுகிறது.

த. வி. கூட்டணி இவ் விஷயத்தில் தனது கடும் எதிர்ப்பையும் அரசுக்கு தெரிவிக்கவுள்ளது

முன்னாள் எம். பிக்களான திரு பி. எஸ். சூசைதாசன் கலாநிதி நீலன் திருச்செல்வம் ஆகியோரும், இ. தொ. கா. பொதுச் செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமியும் இவ் விஷயத்தில் கூடிய கவனம் எடுத்திருப்பதாகத் தெரியவருகின்றது.

பொதுமக்களுடைய பலத்த எதிர்ப்பும் இப்போது ஏற்பட்டுள்ளது அதேநேரத்தில் சுவீகரிப்பு எல்லைகள் உறுதிப்படுத்தப்பட்டு அளவை வேலைகள் நடைபெறுகின்றது. இப்பகுதி எல்லைக்குள் வசித்துவந்த தமிழர்கள் வெளியேறிக் கொண்டு வருகின்றனர்

சுவீகரிப்பு எல்லைகளாவன:-

கிழக்கு:- இறம்பைக்குளம் குளம்

வடக்கு:- சூசைப்பிள்ளையார் குளம் சுடலை.

தெற்கு:- மூன்று முறிப்பு சர்வோதயபண்ணை எல்லை;

மேற்கு:- கண்டி வீதி

## பல்கலைக்கழக மாணவர்

# பாதயாத்திரை திட்டமிட்டபடி 26ம் திகதி ஆரம்பமாகும்

(எம். ரி. சந்திரகுமார்)

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் வெலிக்கடைச் சிறையில் சாகும்வரை உண்ணாவிரதமிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவாக மேற்கொள்ளவிருக்கும் பாதயாத்திரை திட்டமிட்டபடி இம் மாதம் 26 ம் திகதி வியாழக்கிழமை குடாநாட்டிலுள்ள கிராமங்கள் தோறும் ஆரம்பமாகிறது.

யாழ் பல்கலைக் கழகத்தில் நேற்று பத்திரிகையாளருக்கென கூட்டிய மாநாட்டில் பத்திரிகையாளர் மத்தியில் இம்முடிவு தெரிவிக்கப்பட்டது.

இப்பாதயாத்திரை 26-ம் திகதி காலை யாழ். பல்கலைக் கழகத்திலிருந்து ஆரம்பமாகி ஆனைக்கோட்டை, மானிப்பாய், சண்டிருப்பாய், சங்கானை, சித்தன்கேணி, பண்டத்தரிப்பு, விளான், தெல்லிப்பழை, மல்லாகம், அச்சுவேலி, புத்தூர், கோப்பாய், நல்லூர் ஆகிய ஊர்களினூடாக சென்று மீண்டும் பல்கலைக் கழகத்தை வந்தடையும் ஏறக்குறைய 10 நாட்கள் வரை இவ்யாத்திரை நடைபெறுமென அறியப்படுகிறது.

மேற்படி யாத்திரையில் ஆண்கள், பெண்கள் உட்பட 100க்கு மேற்பட்ட மாணவர் பிரதிநிதிகள் கலந்து கொள்வதோடு, பொதுமக்களும் சிறையில் இருக்கும் இளைஞர்களின் பெற்றோர்களும் கலந்துகொள்ளவிருக்கிறார்கள் மேலும் இவ் யாத்திரைக்கு பொதுமக்களினதும், பொது ஸ்தாபனங்களினதும் ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பாதயாத்திரைக்கு பொறுப்பாக ஒவ்வொரு அரசாங்க அதிபர் பிரிவிலும் மாணவர் பிரதிநிதியொருவர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் அங்குவரும் பாதயாத்திரையாளருக்கான சகல ஒழுங்குகளையும் மேற்கொள்ளுவார்கள் எனவும் மாணவர் அவை தெரிவித்தது.

பாதயாத்திரையின்போது தினமும் மாலையில் அவ்வக் கிராமங்களில் கருத்தரங்குகள், நாடகம் (மாயமான்) வில்லுப்பாட்டு (நாமார்க்கும் குடியல்லோம்) ஆகியனவும் இடம்பெறவிருக்கின்றன. இதற்கான ஒழுங்குகளை பல்கலைக் கழக கலாசாரக் குழுவினர் மேற்கொண்டுள்ளனர்.

பாதயாத்திரை நடைபெறும் அதேவேளை பல்கலைக் கழகத்தில் கட்டம் கட்டமாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் மூன்றாவது நாள் தொடர்ச்சியான உண்ணாவிரதம் தொடர்ந்தும் நடைபெறுமென தெரிவிக்கப்பட்ட போதிலும் அது தொடர்பாக திடமான முடிவு எடுக்கப்படவில்லையெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்பாதயாத்திரை தொடர்பாக எதிர்வரும் 23ம் திகதி திங்கள் காலை 9 மணிக்கு யாழ் பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் கூட்டமொன்று நடைபெறவிருப்பதாகவும் அதில் பல்கலைக் கழக சகல பீட மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறும் மாணவர் அவை விசேட அழைப்பொன்றை விடுத்துள்ளது. அத்துடன் பாதயாத்திரையில் கலந்து கொள்ள விரும்புவோர் முற்கூட்டியே மாணவர் அவையுடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(ச)

# ஏன் இந்தப் பரிதாபநிலை

பலவிதமான அறிவும் ஆற்றலும் உள்ளவர்களாயிருந்தும் நாம் ஏன் இந்தப் பரிதாப நிலைக்கு ஆளாகிவிட்டோம்? இதை இன்று எம் இனம் நன்கு சிந்தித்து விடைகாண வேண்டும். தமிழினத்தை வழிநடத்த பல தலைவர்கள் விரும்புகிறார்களே ஒழிய உண்மை, கட்டுப்பாடு உள்ள ஒரு சமுதாயத்தை உருவாக்கி வழிநடத்த தவறுகிறார்கள்.

இதற்கு பரிகாரம் தான் என்ன?

## மக்கள் கருத்து

அறிவு, ஆற்றல், எமது சக்தி இவற்றுக்கு மேலான சக்தி ஒன்று உண்டென ஒப்புக் கொள்ளவேண்டும். அந்தசக்தியிடம் நாம் பூரணமாக சரணடைய வேண்டும். நம்இன இளைஞர்கள் பெரியவர்களை மதியாது "தம் வழியே சரி" என்று உணர்ச்சிக்கு மட்டும் முதல் இடம் கொடுத்து செயல்படுவது மிகவும் வேதனைக்குரியது. மக்களோ எதைச் செய்வது என்று தெரியாத இக்கட்டான நிலையில் உள்ளனர்.

பாரதப்போரில் பஞ்சபாண்டவர்களோ அறவழியில் தெய்வத்தை சரணடைந்து வெற்றிகண்டார்களே ஒழிய அவர்களது படைப்பலத்தால் மட்டும் அல்ல.

யாராயிருந்தாலும் இறைவனைத் தமது மாபெரும்தலைவனாகக்கொண்டு அறவழியில் சென்றால் விடுதலை நிச்சயம் கிட்டும்.

இதற்கு ஒரே வழி வீண் வேடிக்கைகளை வீண் பொழுது போக்குகளை போலி வழிபாடுகளை கைவிட்டு தியாகவழியில் சென்று எம்மை அறவழியில் இட்டுச்சென்று விடுதலையையும் சாந்தியையும் பெற்றுத்தர ஒரு சக்திவாய்ந்த தலைவனை உருவாக்கித்தருமாறு இறைவனை அனுதினமும் வேண்டி மன்றாடுவதாகும். ஒருத்தரை ஒருவர் தாக்காது, ஒருவரை ஒருவர் அன்புகூர்ந்து தமிழினத்தின் பாரிய சொத்தாகிய பண்பாடு என்னும் பலத்தைப் பெருக்கி சத்தியம் தர்மம் என்பவற்றை ஆயுதங்களாக ஏந்தி முதலில் எம்மிடம் இருக்கும் அரக்கத்தனத்தை கொன்றுவிட்டு பின் எதிரியை நோக்குவோம் எம்மிடமுள்ள எம்மதமும் ஆத்ம சக்தியை பெருக்க வழிதேடட்டும் எல்லா வழிபாட்டுத் தலங்களும் எமது பரிதாப நிலையைப்போக்க தினசரி வழிபாடு, கூட்டுப்பிரார்த்தனை போன்ற மன்றாட்டங்களை செய்ய முன்வரட்டும். இறை வணக்கம் என்பது இறைவனது ரூபமான உண்மையோடு இணங்குவதே. எதிலும் உண்மை தலைமைதாங்கட்டும். அன்புவழி நடத்தட்டும் சத்தியமே ஜெயிக்கும்.

அருள்ஒளிமன்றம்,
நவாலி.

## அரிச்சுவடி ஏடு இலவசம்

(யாழ்ப்பாணம்)

பாலர்களுக்கு, விஜயதசமியன்று வித்தியாரம்பம் செய்யும் பாடசாலைகள், தொண்டர் சபைகள், சமய ஸ்தாபனங்கள் அரிச்சுவடி ஏடு தேவைப்படின் மில்க்வைற் தொழிலகத்திற்கு தபால்செலவுடன் விண்ணப்பம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

# 'திருமலையில் 140 அப்பாவி தமிழர்கள் கொலை!'

## ஈ. தே. வி. மு. தகவல்

(சென்னை)

இலங்கையில் திருகோணமலை மாவட்டத்தில் சுமார் 140 அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று சென்னையிலுள்ள ஈழத் தேசிய விடுதலை முன்னணியின் தகவல்நிலையம் அறிவித்துள்ளது.

திருகோணமலையிலுள்ள அகதிகள் முகாமொன்றிலிருந்த தமிழ் அகதிகளில் பெண்கள், குழந்தைகள் உட்பட 100 பேர் கொல்லப்பட்டனர். தொடர்ந்து அம்முகாமிலிருந்து 40 தமிழ் இளைஞர்கள் விசாரணைகளுக்கென்று இராணுவ முகாம் கொண்டுசெல்லப்பட்டனர். பின்னர் அந்த இளைஞர்களும் கொலையுண்டார்கள் என்ற தகவல் கிடைத்துள்ளது என்று ஈழ தேசிய விடுதலை முன்னணி மேலும் தெரிவித்துள்ளது.

இதுதவிர திருமலை மாவட்டத்தில் பலத்த இராணுவ கடற்படைத் தாக்குதல்கள் அடிக்கடி இடம்பெற்று வருவதாகவும் கடற்படைப் பீரங்கிகள் கடற்கரையோரம் குண்டு வீச்சில் ஈடுபட்டன எனவும் தெரிவிக்கப்பட்டது.


இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தியின் கவனத்துக்கும் இச்சம்பவங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன என்று கூறப்பட்டது. (கி)

## இன்று

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை நடைபெறவுள்ளது.

பிரதம அதிதியாக யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறைத்தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி கலந்துகொள்ளவுள்ளார். (மா)




மன்னார் சென்சேவியர் மகாவித்தியாலயத்தில் அமைந்துள்ள அகதிகள் முகாமில் மன்னார் லயன்ஸ் கழகத்தினர் வைத்திய சேவையொன்றை நடத்தினார்கள். தொற்று வயிற்றோட்டத்தினால் பாதிக்கப்பட்ட குழந்தையொன்றை டாக்டர் எம். கதிர்காமநாதன் பரிசோதிப்பதைப் பார்க்கலாம். லயன் (தலைவர்) கே. குணரட்ணம், உபதலைவர் லயன் கே. எம். அபூபக்கர், லயன் எஸ். எஸ். தாஜுதீன், செயலர் வி. தாமோதரம்பிள்ளை ஆகியோர் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

### கடத்தப்பட்டதாகக் கூறப்பட்ட

# லொறி அனுராதபுரத்தில் எரிக்கப்பட்டுள்ளதாம்

(வவுனியா)

கொழும்பிலிருந்து வவுனியாவிற்கு வரும்போது கடத்தப்பட்டதாகக் கூறப்படும் வவுனியா தனியாருக்குச் சொந்தமான லொறி அனுராதபுரத்தில் எரிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த லொறிச்சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

சுமார் நான்கு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களுடன் லொறி வரும்போது வவுனியாவிற்கு அருகாமையில் வைத்து குறித்த லொறி இனந்தெரியாத வாலிபர்களினால் கடத்திச் செல்லப்பட்டதாக லொறிச்சாரதி தெரிவித்திருந்தார். கிளினரும் கடத்தி வைக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இப்போது பல தகவல்கள் வெளியாகியுள்ளன. என்னவென்றால் லொறியிலிருந்த பொருள் கொழும்பிலேயே இறக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இதனை அடுத்து லொறிச்சாரதியான சிறிசேன கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

# தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யவும்

(யாழ்ப்பாணம்)

விசாரணை எதுவுமின்றி 18 மாதங்களுக்கு மேலாக சிறைச்சாலைகளில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலைசெய்யவேண்டும் என்று விழிப்பு மன்றங்களின் அமைப்பாளர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சிறைவைக்கப்பட்டிருக்கும் கைதிகள் மீதான பாலியல் வதைகளையும், படுகொலைகளையும் உடனடியாக நிறுத்தும்படியும் பொதுமக்கள் சார்பாக அரசாங்கத்துக்குவேண்டுகோளொன்றையும் இம்மன்றம் விடுத்துள்ளது.

விசாரணைசெய் அல்லது விடுதலைசெய் என்ற கோரிக்கையை முன்வைத்து வெலிக்கடைச் சிறைச்சாலையில் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கும் தமிழ் இளைஞர்களின் கோரிக்கையை நிறைவேற்றுமாறும் இம்மன்றம் கேட்டுள்ளது. (மா)

## மரணப்பிடியில் 42-வது நாள்

(யாழ்ப்பாணம்)

வெலிக்கடைச் சிறையில் அடிப்படை வசதிகள் இன்றித் தவிக்கும் அரசியற்கைதிகளுக்கு உதவுமாறு ஈழமக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

'ஈழம் செய்திப்பலகை' சுவரொட்டியில் இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அச்சுவரொட்டியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வெலிக்கடை வதைமுகாமில் அடிப்படை வசதிகள் இன்றித் தவிக்கும் அரசியற் கைதிகளுக்கு பொதுநிறுவனங்களூடாக நேரில் கையளிக்க வசதிகள் உண்டு. இயலுமான வரை இப்பொருட்களைத் தந்துதவவும்.

வழங்க வேண்டிய அத்தியாவசியப் பொருட்கள் சாரம், சேட்டு, துவாய், பெனியன், சவர்க்காரம், பற்பொடி, பற்பசை, பல்விளக்கும் பிறஸ்

வர்த்தகர்களின் பங்களிப்பைக் கோருகிறோம்.

வெலிக்கடைப் போராட்டம் 42-வது நாள்

## பாதுகாப்பு அமைச்சு அறிக்கை

(கொழும்பு)

சிறையில் தமிழ்க்கைதிகள் உண்ணாவிரதம் இருக்கின்றனர் என்று பரப்பப்பட்ட செய்தி வெறும் கட்டுக்கதை என்று பாதுகாப்பு அமைச்சு நேற்றுவெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"காலி பூசா முகாமில் தமிழ்க்கைதிகள் நலமாக இருக்கிறார்கள். அவர்கள் எவ்வித துன்புறுத்தலுக்கும் ஆளாகவில்லை என்று அவர்களே சொந்தக் கையெழுத்தில் தெரிவித்திருக்கின்றனர்" என்றும் மேற்படி அறிக்கை கூறுகிறது.

## வவுனியா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தினார். அந்த மாநாட்டில் 'ஈழநாடு' நிருபரின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே மேற்குறிப்பிட்ட தகவலை இணைப்பதிகாரி தெரிவித்தார்.

வவுனியாவில் காணி சுவீகரிக்கப்படுவதைத்தொடர்ந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடும், பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்கள் விரும்பிய இடத்தில் உரிய காணியும் வழங்கப்படும் என்றும் இணைப்பதிகாரி சொன்னார்.

பாதுகாப்புக்காரணங்களுக்காகவே அரசாங்கம் காணிகளைச் சுவீகரித்ததென்றும் அவர் தெரிவித்தார்.

## யுத்த...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஈழதேசிய விடுதலை முன்னணித்தலைவர்கள் நேற்று மீண்டும் இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரியையும் மற்றும் உயர் அதிகாரிகளையும் சந்தித்து பேச்சுக்கள் நடத்தினர்.

(3-ம் பக்கமும் பார்க்க)

# "ஆரம்பசுகாதார பராமரிப்பும் முதலுதவிசிகிச்சையும் அவசியமானது"

(யாழ்ப்பாணம்)

"ஒரு மனிதனுக்கு நோய் வந்தபின் காப்பதைவிட வருமுன்னர் காப்பதே மேலானதாகும். வைத்தியசாலையோ, வைத்திய வசதியோ எதுவுமில்லாத எழுவைதீவு மக்களுக்கு இந்நோக்கத்திற்காகத்தான் ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு முதலுதவிச் சிகிச்சையும் மிகவும் அத்தியாவசியமாகின்றது".

இவ்வாறு எழுவைதீவு மரியன்னை மகளிர் அபிவிருத்தி மன்றத்தில் ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்தினை ஆரம்பித்துவைத்துப் பேசிய ஊர்காவற்றுறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் செல்வி லலிதாம்பிகை கதிர்காமலிங்கம் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில், "ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம் ஒரு முழுமை வாய்ந்த வைத்திய சாலையல்ல. ஆயினும் பிரயாணக் கஷ்டங்கள் நிறைந்த இந்த மக்களுக்கு இந்த நிலையம் ஒரு வரப்பிரசாதமாகும். இதனை மகளிர் மன்றமும், சுகாதாரத் தொண்டர்களும் நல்ல முறையில் பயன்படுத்தி, இதன் நோக்கத்தினைப் பூர்த்திசெய்ய வேண்டும்" என்றார்.

ஊர்காவற்றுறைப் பங்குத் தந்தை அருட்திரு சா. பி. இருபாலந்தன் அடிகளார் தமது தலைமையுரையில், "இக்கட்டான இக்காலகட்டத்திலும், பிரயாணக் கஷ்டமான இந்த எழுவைதீவுப் பகுதியிலும் பயிற்றப்பட்ட வைத்தியர்களின் வெளியேற்றமும், மருந்துச் சேவைச் செலவு அதிகரிப்புமுடைய இந்நாட்களில், சிறுவில் வெற்றியளித்த வெறுங்கால் வைத்திய முறைக்கேற்ப இவ்வாரம்ப சுகாதார நிலையம் திறக்கப்பட்டு, பயிற்றப்பட்ட சுகாதாரத் தொண்டர்களால் நிர்வகிக்கப்படுவது பாராட்டுக்குரியது" என்றார்.

கிராம அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. பே. மனுவேற்பிள்ளை, மகளிர் அபிவிருத்தி மன்றத் தலைவி திருமதி பே. அமலோற்பவநாயகி ஆகியோரும் இத்திறப்பு விழாவில் உரையாற்றினர்.

## 'அஸ்தமனத்தில் விடியல்' நாடகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கனகரெத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் கலாச்சாரவாரவிழாவை முன்னிட்டு முற்றிலும் பெண்கள் பாத்திரமேற்று நடிக்கும் 'அஸ்தமனத்தில் விடியல்' என்ற நாடகம் இன்று பகல் பாடசாலை பிரதானமண்டபத்தில் நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு எஸ். சிவநாயகமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

இந்நாடகத்தை திரு. க. வை. தனேஸ்வரன் நெறிப்படுத்தியுள்ளார். (ஐ)

## பரீட்சைக்குத் தோற்றாத சட்டபீடமாணவர் 21ல் கூடுவர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலிருந்து கொழும்பில் நடைபெற்ற பரீட்சைக்குத் தோற்றாத சகல சட்டபீட மாணவர்களுக்கும் மறு பரீட்சைக்கு தோற்றுவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளும் வகையில் 21-ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் ஸ்ரான்லி வீதி பட்டப்படிப்புகள் கல்லூரியில் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது. (ச)

## புன்னாலைக்கட்டுவனில் உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

வெலிக்கடைச் சிறையில் சாகும்வரை உண்ணாவிரதமிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவாக புன்னாலைக்கட்டுவன் கிழக்கு அச்செழு அம்மன் கோவிலில் நேற்று முன்தினம் ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

கிராமிய உழைப்பாளர் சங்கம், வறிய கூலி விவசாயிகள், தொழிலாளர்சங்கம் ஆகியவை இணைந்து நடாத்திய இவ் உண்ணாவிரதத்தில் சுமார் 300 பேர்வரை கலந்து கொண்டனர். காலை 8 மணிக்கு ஆரம்பமாகிய இவ் உண்ணாவிரதம் மாலை 5 மணிக்கு முடிவடைந்ததைத் தொடர்ந்து கருத்தரங்கொன்றும் நடாத்தப்பட்டது. (ச)

## கதவடைப்பு கைவிடப்பட்டது

(வட்டுக்கோட்டை)

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் காவலாளியைத் தாக்கியவர்களை இனங்காண வேண்டும் என்ற கோரிக்கையின் மீது நடைபெற்ற கதவடைப்புப் போராட்டம் சமரசம் காணப்பட்டுள்ளது.

தொழிலாளர் நேற்றுமுன்தினம் வேலைக்குச் சென்றனர். இச்சமரச முயற்சியில் மூன்று இயக்கங்கள் ஈடுபட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலை நடத்தியவர், காரணமாக அமைந்தவர் ஆகியோரை இனங்கண்டு கொண்டதை அடுத்தே போராட்டம் கைவிடப்பட்டது.

தொழிற்சங்கச் செயலாளர் திரு. செ. இராசதுரை மற்றும் தொழிலாளர் உறுப்பினர் இயக்கம் சார்ந்தவர்கள் ஆகியோர் சங்கக் காரியாலயத்தின் முன்னர் நடைபெற்ற பேச்சுவார்த்தைக் கருத்தரங்கின் போது சமரசம் காணப்பட்டது.

## பணிவான வேண்டுகோள்

01-09 85 அன்று எனது வீட்டில் புகுந்த இனந்தெரியாத துப்பாக்கி ஏந்திய இளைஞர்கள், என்னிடமிருந்த அத்தனை பொருட்களையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். இதனால் நான் எதிர்காலத்தில் எந்த நடவடிக்கையும் செய்யமுடியாத நிலையிலும் எனது தொழில் முயற்சிகள் பாழ்பட்டும் போயுள்ளன. எனவே, கொள்ளையடிக்கப்பட்ட நகைகள், T V. சுவர் மணிக்கூடு, றேடியோ, மூக்குக்கண்ணாடிகள் உட்பட அனைத்தையும் ஒப்படைத்து, என்னை வாழவிடுமாறு சம்பந்தப்பட்டவர்களையும், இயக்கங்களையும் மன்றாட்டமாகக் கேட்கின்றேன்.

ஆ. வேலாயுதம்
ஒலுமடு, மாங்குளம். (798)

## உயர்நிலை மாணவர் ஒன்றியம் நிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு பல பகுதிகளில் நடந்த சம்பவங்களினால் அகதிகளானவர்களுக்கு உதவி யளிப்பதற்கான ஏற்பாட்டை உயர் நிலை மாணவர் ஒன்றியம் செய்துவருகிறது

பாடசாலை நிர்வாகத்தினரும், மாணவர்களும் தலா ஒரு ரூபா விதம் அகதிகள் நிதிக்காக தந்துதவும்படி ஒன்றியம் வேண்டுகோள்விடுத்துள்ளது.

இந்நிதியைப் பெறுவதற்காக உயர் நிலை மாணவர் ஒன்றியத்தை சேர்ந்தவர்கள் இம் மாதம் 20ம் திகதி வெள்ளிக்கிழமை, பாடசாலைகளுக்கு செல்லவிருக்கின்றனர். (ஈ)

## நியாயமான போராட்டத்தை ஒருபோதும் அடக்கப்பட முடியாது

(யாழ்ப்பாணம்)

"தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் சிறையில் நடத்திவரும் உண்ணாவிரதப் போராட்டம் முற்றிலும் நியாயமானதொன்றாகும். அதை முறியடிக்க அரசாங்கம் இரகசிய வழிகளில் எடுத்துவரும் நடவடிக்கைகள் வன்மையாகக் கண்டித்து எதிர்க்கப்பட வேண்டியதொன்றாகும். நீதியான கோரிக்கையும் நியாயமான போராட்டமும் ஒருபோதும் எவராலும் அடக்கப்பட முடியாதவையாகும்."

இவ்வாறு புத்தூர் கலைமதி சனசமூக நிலையம் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களின் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்து நடத்திய ஒரு நாள் உண்ணாவிரத முடிவில் இடம்பெற்ற கருத்தரங்கில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) சார்பாக கலந்து கொண்டு உரையாற்றிய திரு. கே. செந்தில்வேல் குறிப்பிட்டார்.

நிலையத் தலைவர் திரு கா. கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்ற மேற்படி கருத்தரங்கில் திரு. செந்தில்வேல் தொடர்ந்து பேசுகையில்: நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு ஹிட்லர் சுத்த ஆரிய இனக் கோசத்தைக் கிளப்பி ஜெர்மன் மக்களைத் தவறுவழிநடத்த முற்பட்டு உலகத்தை ஆதிக்கம் செய்ய பேரவாக் கொண்டான். நாட்டிலும் தமிழர்களை அழித்தொழித்து தமது பேரினவாத வெறிப்பாதையில் சென்று வெற்றி பெறலாம் என அதிகாரத்தில் உள்ளவர்கள் கனவு காண்கிறார்கள், ஆனால் அத்தகைய கனவுகள் ஒருபோதும் நனவாகப் போவதில்லை.

## சைக்கிள் மோதல்; ஆசிரியர் ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)

இருசைக்கிள்கள் மோதுண்டதில் ஆசிரியரொருவர் படுகாயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தாவடியில் நேற்று முன்தினம் மாலை 3 30மணியளவில் நடந்துள்ளது அருகருகே விரைவாக சென்று கொண்டிருந்த இரு சைக்கிளோட்டிகளும் ஒருவரையொருவர் விலத்த முற்பட்டபோதே இவ்விபத்து ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

இவ் விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர் தாவடியைச்சேர்ந்த கே பேரின்பதாசன் என்னும் ஆசிரியராவார். (ச)

## இந்து ஆரம்ப பாடசாலை உப அதிபர் ஓய்வுபெறுகிறார்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை உபஅதிபராகக் கடமையாற்றிய திருமதி அ. குமாரசாமி இன்றுமுதல் ஓய்வுபெறுகின்றார்.

முப்பத்தைந்து வருட ஆசிரிய சேவையில் பதினெட்டு வருடங்களை இந்து ஆரம்ப பாடசாலையில் சேவையாற்றிய இவருக்கு மாணவர்களும் ஆசிரியர்களும் அதிபர் திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நேற்று சேவைநலம் பாராட்டுவிழா நடத்தினர்.

## 'அந்தத்' தமிழகம் நோக்கி.....

— தி. பொன்னம்பலவாணர்

[9]

தமிழகத்தில் சேர, சோழ, பாண்டியர்களது முடியாட்சி மறைந்தபின் சைவத்தையும் தமிழையும் பேணிக்காத்து வளர்த்தவை சைவ ஆதீனங்களேயாகும். இவ்வாதீனங்களுள் திருவாவடுதுறை ஆதீனம், தருமபுர ஆதீனம் என்பனவே முதன்மையானவை.

இந்த யாத்திரையின் போது தருமபுர ஆதீனத்துக்குச் செல்ல நேர்ந்தது எனக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.

இதற்கு மேலாக ஆதீன வைபவங்களில் உன்னதமான பட்டினப் பிரவேச வைபவத்தைப் பார்க்க வாய்ப்பு ஏற்பட்டது ஒரு சிறந்த அதிர்ஷ்டம் என்றே சொல்லவேண்டும்.

கண்டிக்குப் பெரஹராவும், யாழ்ப்பாணத்துக்கு நல்லூர்த் திருவிழாவும் போலவே ஆதீனங்களுக்கு பட்டினப்பிரவேச வைபவம் ஓர் உன்னத நிகழ்ச்சியாகவுள்ளது.

தமிழ்ச்சிவிகை, 'பல்லக்கு' என்பனவற்றில் ஆதீன குரு மகாசந்நிதானம் பவனிவரும் நிகழ்ச்சி அரச சிறப்புடைய அழகிய காட்சியாகும்.

ஆதீனகுரு முதல்வர் சமாதி எய்திய தினத்திலேயே வருடம்தோறும் பட்டினப் பிரவேசவிழா தருமையாதீனத்தில் நடைபெற்று வருகின்றது இவ்வருடம் ஜூன் மாதம் 6-ம் திகதியே பட்டினப் பிரவேசவிழா தருமையாதீனத்தில் நடைபெற்றது

பட்டினப்பிரவேசநாள் தீர்த்தத் திருவிழா அமையும்படி குருஞானசம்பந்தரின் சமாதி ஆலயமான ஞானபுரீஸ்வரர் ஆலயத்தில் மகோற்சவம் நடைபெறுகின்றது. பட்டினப் பிரவேசத்துக்கு முதல் நாள் ஞானபுரீஸ்வரர் தேர்த்திருவிழா. தேர்த்திருவிழாவன்று இரண்டு தேர்களில் பஞ்சமூர்த்திகளும் உலா வருகின்றனர். இந்த இரு தேர்களையும் இழுத்துக்கொண்டு வருவதே சிரமசாத்தியமான நிகழ்ச்சி; காரணம், தேர்த்திருவிழாவில் மக்கள் கூட்டமில்லை. ஆனால் குரு மகாசந்நிதானம் உலாவரும் பட்டினப்பிரவேச நிகழ்ச்சிக்கு சன நெரிசல் மிக அதிகம். மலர்களால் அலங்கரிக்கப்பட்ட தங்கத் தண்டிகையில் (பல்லக்கு) மகாசந்நிதானம் வீற்றிருக்க முதல்தரமான நாதஸ்வரக் கோஷ்டி கானம் இசைத்துச்செல்ல தம்பிரான் சுவாமிகளும் சமூக, அரசியல், கலைப்பிரமுகர்களும் சந்நிதானத்தைச் சூழ்ந்துவர பட்டினப் பிரவேசம் கோலாகலமாக நிகழ்கின்றது.

ஆதீனத்தில் பலத்த பாதுகாப்பு மரியாதைகளுடன் கூடிய அத்தாணிமண்டபம்போன்ற மகா சந்நிதானத்தின் இருப்பிடத்திலிருந்து பல்லக்கு இருக்கும் இடத்துக்கு வரும் ஆதீன சம்பிரதாயமே அழகானது செல்வச் சிறப்புக்கு அத்தாட்சியானது!

அரசகௌரவத்தை குறிப்பிடும் கைதருவார் ஆகிய இரு தம்பிரான்கள் மகா சந்நிதானத்தின் இரு திவ்விய கரங்களையும் பற்றி அழைத்துவர மகாசந்நிதானம் பொன்தட்டால் அணிசெய்யப்பட்ட மிதியடிகளில் ஏறிநடந்து வருவார்.

கழுத்தில் உருத்திராட்ச வடங்கள் நிறைந்திருக்க கைகளில் வைர மோதிரங்கள் ஒளிர சந்நிதானம்வரும்போது மட்டுமன்றி சந்நிதானம் புறப்பட்டுச் செல்லும்போதெல்லாம் மெய்க்காவலாளி ஒருவன் வாள்ஒன்றைக் கையில் நிமிர்த்திப் பிடித்தபடி வருவது உண்மையில் சிறுவர்களுக்கும் புதியவர்களுக்கும் அச்சத்தையே உண்டுபண்ணும்.

## தருமை ஆதீன பட்டணப் பிரவேசம் ஒரு கண்கொள்ளாக்காட்சி!

பட்டினப்பிரவேச உலாவில் மிக முன்பாக பொய்க்கால் குதிரையாட்டம் நிகழ அதனைச்சூழ ஒரு ரசிகர்கோஷ்டி செல்கின்றது.

இக்கோஷ்டிக்கு அடுத்ததாக யானைகள் அணிவகுத்துச் செல்கின்றன. இவற்றையடுத்தே மகாசந்நிதானத்தின் பவனி.

அரண்மனை போலிருக்கும்

பட்டினப் பிரவேச உலா முடிந்து வந்ததும் கொலுக் காட்சி இடம்பெறும்.

(7-ம் பக்கம் பார்க்க)

## உருக்கமான வேண்டுகோள்

கடந்த 5-7-85 அன்று ஆயுதம் தாங்கிய இளைஞர்களால் புளியங்குளத்தில் வைத்து எமது யானைமார்க் குளிர்பானங்களுடன் கடத்தப்பட்ட 26 Sri 2263 இலக்க லொறியில் இருந்த சாரதியையும் கிளீனரை தயை கூர்ந்து மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யும்படி அதனைக் கடத்தியவர்களுக்குக் கோரிக்கை விடுக்கின்றோம். சாரதிக்கு மனைவியும் ஆறு பிள்ளைகளும் உள்ளனர் கிளீனருக்கு வயதில் குறைந்த ஐந்து சகோதரர்கள்; தந்தை இல்லை. இவர்களிருவரது வருமானத்தில்தான் இவர்கள் குடும்பங்கள் நடக்கின்றன. இவர்கள் இருவரும் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவர்கள். இவர்களை எம்மிடம் ஒப்படைப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

ஆ. ச. சங்கரப்பிள்ளை அன் சன்ஸ்,
113 1/1. கண்டி வீதி.
கிளிநொச்சி. (755)

## மரண அறிவித்தல்

### இடைக்காடு குமரேசு நடராசா (முத்து வாத்தியார்)

இளைப்பாறிய ஆசிரியர் குமரேசு நடராசா காலமாகிவிட்டார். இவர் கண்மணியின் அன்புக் கணவரும், குமரேசபகபதி (அதிபர், பிராந்தியக்கூட்டுறவுப்பயிற்சி நிறுவனம், யாழ்ப்பாணம்) திருமதி செல்வநாயகி (ஆசிரியை இடைக்காடு மகாவித்தியாலயம்), திருமதி சிவபாக்கியம், மாணிக்கவாசகர், சிவபாதசுந்தரம் (வலி. கிழ வடபகுதி பல. நோ. கூ. சங்க உதவி கிராமிய வங்கி முகாமையாளர்), திருமதி பொன்மலர் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி யோகேஸ்வரி (ஆசிரியை, R. C. பாடசாலை, நீர்வேலி), பரநிருபசிங்கம் (கூட்டுறவுப் பரிசோதகர், பரந்தன்), கந்தசாமி (வலி கிழ வடபகுதி பல நோ கூ சங்க களஞ்சியப்பொறுப்பாளர்), திருமதி வசந்தி, தவராசசிங்கம் (ஆசிரியர், அளம்பில் R. C. M பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், கு. வல்லிபுரம், காலஞ்சென்ற கு. செல்லத்துரை (இளைப்பாறிய ஆசிரியர்), காலம் சென்ற கு. மாணிக்கம் ஆசிரியர்), திருமதி பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சின்னத்துரை (இளைப்பாறிய ஆசிரியர்) யின் மைத்துனரும், பவன், கிரிதரன், ருசாந்தி, கிருபானந்தி, விமலநாதன், லோகா, லோசனா, கிரிவேல், சோதிவேல், நரேந், கெளசி ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 18-9-1985 புதன்கிழமை காலை 10 00 மணியளவில் இடைக்காடு மயானத்தில் நடைபெற்றது இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். 791


# இன்று ஆரம்பம்!

காலை 8-00 மணிக்கு

A/L 86

DAY CLASS

PHYSICS — திரு. சத்தியசீலன்
CHEMISTRY — திரு. மக்லி
BOTANY — திரு குகாதரன்
ZOOLOGY — திரு. நாகநாதன்

PURE and APPLIED MATHS

திரு. நல்லையா

விபரங்களுக்கு:

NEW MASTER INSTITUTE

BMC LANE, JAFFNA.

## உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

வெலிக்கடைச் சிறையில் உயிருக்காக போராடிக்கொண்டிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவாக கோண்டாவில் ஸ்ரீ வாகீஸ்வரி சனசமூக நிலைய அருகில் முழுநாள் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது

கோண்டாவில் பொதுமக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் உண்ணாவிரதத்தில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.


**ராஜா மினி**

தினசரி 10-30, 2-30, 6-30

கிரஞ்சீவி-ஊர்வசி

மச்சக் காளை

(ஈஸ்ட்மன் கலர், புதிய வெளியீடு)

**உஷா மினி**

10-30, 2-30, 4-45, 6-45

புதிய வெளியீடு

Chuck Norris......in

Silent Rage

(Adults only)

தற்போது கொழும்பில் ஜனத்திரளாக காட்சி யளிக்கும் திகில் சண்டைப்படம்.

**லிபேர்ட்டி மினி**

10-30, 2-30, 4-45; 7-00

RED SUN

சிறந்த சண்டைப்படம்

**சரவணபவன் மினி சினிமா**

(பெருமாள் கோவிலுக்கும் - வெலிங்டன் சந்திக்கும் இடையில்)

4 x 4 திரையில்

10-30, 2-30, 4-30, 7-00

John Saxon in

PRISONERS OF THE LOST UNIVERSE

(மறைந்த மண்டலத்தின் கைதிகள்)

(வயது வந்தோருக்கு மட்டும்)

**ஸ்ரான்லி மினி**

"Ks" திரைவானில்

10-30, 12-30, 2-30

4-30, 6-30

Sophia Laurance in

Sun Flower

(Love story)

இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போது தனது காதலியைப் பிரிந்து போருக்குச் செல்லும் ஒரு வீரனின் காதல் காவியம்.

**வெலிங்டன்**

10-30, 2-30, 6-30,

பாக்கியராஜ்-அம்பிகா நடித்த

அந்த ஏழு நாட்கள்

**வீடியோ சினிமா**

10-30, 2-30, 6-30

2-வது மாதமாக ஓடுகிறது!

தியாகராஜன், விஜயசந்திரன், பூர்ணிமா ஜெயராம், சில்க்ஸ்மிதா, ஜெய்சங்கர் நடித்த

ராஜு மகேந்திராவின்

நீங்கள் கேட்டவை

சுகம்மான கதை


## ‘சமய அறிவுப் போட்டி சமய அறிவை வளர்க்கிறது’

(வண்ணார்பண்ணை)

‘‘சமய அறிவுப் போட்டிகளை நடத்துவதன்மூலம் இளைஞர்கள் யுவதிகள் மத்தியில் அறிவு விரிவடைய வழியேற்படுகிறது. இந்த அடிப்படை நோக்கத்தை வைத்தே நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு மாநகரசபை இப் போட்டியை நீண்டகாலமாக நடத்திவருகிறது’’

இவ்வாறு யாழ். மாநகர ஆணையாளர் திரு சி. வி. கே. சிவஞானம் தெரிவித்தார். சமய அறிவுப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் வைபவத்தில் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

நல்லூரில் அமைந்துள்ள மாநகர அலுவலகத்தில் இடம்பெற்ற இவ்வைபவத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் ‘இப் போட்டியில் அதிக மாணவர்கள் கலந்துகொண்டுள்ளது இப் போட்டியின் நோக்கம் வெற்றியடைந்து வருவதை எடுத்துக் காட்டுகின்றது.

அடுத்த ஆண்டு இப்போட்டியை வயது அடிப்படையில் இரு பிரிவுகளாக நடத்த மாநகரசபை நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

## இன்றைய பலன்

மாதம்: புரட்டாதி

திகதி: 3(19 9-85)

கிழமை: வியாழன்

திதி: பஞ்சமி

நட்சத்திரம்: விசாகம்

மேடம்; சிந்தையிலே குழப்பநிலை தோன்றக்கூடும். மனைவியின் உடல்நிலையும் சிறிது கவலைதரலாம். செலவினங்கள் அளவிற்கு மிஞ்சியதாகவே யிருக்கும். தெய்வ நம்பிக்கை நன்று.

இடபம்: இருவிடயம் கூட இன்று கிரமமாகத்தோன்றும். தொழில்துறையில் வீண் விரயமும் உண்டாகும். வீண் அலைச்சலுக்கும் இடம் ஏற்படலாம். உள்வீட்டிலும் பூசல்கள் தோன்றலாம்.

மிதுனம்: பிதாவழி மூலம் ஆதரவுகள் கிட்டும். புதிய துறைகளிலும் ஈடுபடுவீர்கள். பிரச்சனைகளுக்கு இன்று நல்ல முடிவு கிடைக்கும். சுமாரான தினம்.

கடகம்: கடமையில் முதலிடம் கிடைக்கும். பதவி உயர்வுக்குமிடமுண்டு. விடுதி நடத்துபவர்களுக்கு உற்சாகமான தினம். இடமாற்றமும் உண்டு. இனசன மகிழ்ச்சியுமுண்டு.

சிங்கம்: உயர்கல்வியில் ஈடுபடுவோருக்கு உற்சாகமான தினம். சிலருக்கு புதிய வீதானமும் கிடைக்கும். ஆசிரியர்களுக்கும் புதிய வழிகளில் லாபம் கிட்டும். சுபதினம்.

கன்னி: வருமானத்தில் வீழ்ச்சி தென்படும். எதிரிகளின் சூழ்ச்சிகளும் பலமாகவே யிருக்கும். தனிவழிப் பயணத்தைத் தவிர்த்து நடக்கவும்.

துலாம்: உடல்நலமும்பாதிக்கப்படலாம். வாழ்க்கை மந்தகதியில் நடைபெறும். கொடுக்கல் வாங்கல் பிணக்குமுண்டு உடன் தொழிலாளர் மத்தியில் அவதானம் வேண்டும்.

விருச்சிகம்: வாழ்க்கையில் வசந்தம் பிறக்கும். எதிர்பாராத முன்னேற்றமும் ஏற்படும். வெளியூர் புதினமும் கிட்டும். காதலர்களுக்கும் வாழ்க்கையில் வழிபிறக்கும்.

தனுசு; நண்பர்களினால் தொல்லைகள் தோன்றலாம். இதயத்தில் எரிமலை குமுறும். தானியத்துறையிலும் நஷ்டமேற்படும். சகோதர வழியால் பிரச்னைகளும் தோன்றக்கூடும்.

மகரம்: தாய்வழிப்பந்துக்கள் மூலம் நன்மையும் கிட்டலாம். கடமையிலும் புதிய ஆர்வம் கிட்டலாம். சுபகருமம் ஒன்றும் இடம்பெறலாம். கல்வி உயர்வுமுண்டு.

கும்பம்; புத்திரர் வழியால் தனவரவுமுண்டு. புதுமையான எண்ணங்களும் தலைதூக்கலாம். காதலர்கள் வாழ்விலும் சுகுஷியான தினம். தொழில் விருத்திக்கு இடமுண்டு.

மீனம்: துன்பத்தின் ரேகைகள் படரும். எதற்கெடுத்தாலும் சீறி விழுவீர்கள். கொடுக்கல் வாங்கல் மூலம் ஏமாற்றமடைய நேரும். தொழில் துறையிலும் தொல்லைகள் தோன்றி மறையலாம்.

திருமலை

வே. ரவீந்திரன்

## அந்தத் தமிழகம்

[6-ம் பக்கத்தொடர்ச்சி]

அலங்கரிக்கப்பட்ட மணவறை போன்ற கொலுவில் மகாசந்நிதானம் இருக்க தம்பிரான் சுவாமிகளுள் முதன்மையானவர் இறைவனைப் பூசிப்பதுபோல தீபாராதனை முதலியவற்றுடன் பூசை செய்வார். அதன்பின் மகா சந்நிதானம் எல்லோருக்கும் விபூதிப் பிரசாதம் வழங்குவார்

தருமையாதீன முதல்வரின் சமாதி ஆலயமாகிய ஞானபுரீஸ்வரர் கோவில் கொடியேற்றநாள் தொடங்கி பட்டினப்பிரவேசநாள் வரையான 10 நாட்களும் தருமையாதீனத்தில் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு நடைபெற்றது

இம் மாநாட்டில் சித்தாந்த வகுப்பு-பண்ணிசை விளக்க வகுப்பு-கருத்தரங்கம், பட்டிமன்றம்-வழக்காடுமன்றம், சிந்தனை மேடை, கவியரங்கம்-விரிவுரைகள், நாட்டியம், இவர்கள் சந்தித்தால், வினாவிடையரங்கம், முதலிய நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

கி. ஆ. பெ. விசுவநாதம் தலைமையில் நிகழ்ந்த வினாவிடை அரங்கம் வள்ளுவர், சேக்கிழார் வழி வாழ இயலுமா?’’ என்னும் பொருள் பற்றி நடம் பெற்றது ஐவர் சொற் பொழிவாளர் இதில் பங்குபற்றினர் முதலாமவர் விடுக்கும் சந்தேகங்கள் வினாக்களுக்கு அடுத்துவருபவர் பதிலளித்து புதிய சந்தேகங்கள் கேள்விகளை முன்வைத்துச் செல்வார் இப்படியான இடைவிடைகளில் ஏற்படும் தொய்வுகளை நீக்கி நிறைவுரை வழங்குவார் தலைமைதாங்குபவர்.

இவர்கள் சந்தித்தால் என்ற நிகழ்ச்சியில் காரைக்காலம்மையாராகவும் மங்கையர்க்கரசியாராகவும் பெண்பாலதிஞர் இருவர் மேடையில் உரையாடினர்! இதுபோன்ற நிகழ்ச்சி சில இடங்களில் நாகரிகக்குறைவான ஏச்சுப் பேச்சுக்களாக முடிவதும் உண்டு என்று அங்கு சிலர் கூறினர் ஆதீனத்தில் இந்நிகழ்ச்சி மிகவும் கண்ணியமாகவே இருந்தது.

(தொடரும்)

## சாத்வீகப் போராட்டம்

(வவனியா)

வவனியா தமிழ்ப்பிரிவு கூட்டுறவுச் சங்க சமாஜ சங்கத்தில் இடம்பெற்ற கொள்ளையைக் கண்டிக்கும் முகமாக சங்க ஊழியர்களும், பொதுமக்களும் சாத்வீகப் போராட்டம் நடத்த முடிவு செய்துள்ளனர்.

## இப்படியும் நடக்கிறது

கனடா, பிரிட்டன் பொதுநலவரசுப் புலமைப் பரிசில் (1986-ம் ஆண்டுக்கான) விண்ணப்பங்களை உயர் கல்வி அமைச்சு கோரியுள்ளது.

இது சம்பந்தமான அறிவித்தல் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியமூன்று மொழிகளிலும் இம்மாதம் ஆறும் திகதி வெளிவந்த அரசாங்க வர்த்தமானியில் இடம்பெற்றுள்ளது. முடிவு திகதி 27-09-85-

இதில் ‘சிறப்பு’ என்ன தெரியுமா?

ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் அறிவிப்பு விபரங்கள் சரியாக இடம்பெற, தமிழில் மட்டும் முக்கிய தகவல் பிழையாக வெளிவந்திருக்கிறது.

அதாவது.........

விண்ணப்பதாரிகள் 01-10-1985ல் முப்பத்து ஐந்து வயதுக்குக் குறையாதவராய் இருத்தல்வேண்டும் என்று தமிழ் அறிவித்தலில் வெளிவர; சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் விண்ணப்பதாரர்கள் 01-10 1985ல் முப்பத்து ஐந்து வயதுக்குக் குறைவானவர்களாக இருத்தல்வேண்டும் என்று வெளிவந்திருக்கிறது.

அதாவது.........

வயது வரம்பு ஆங்கில,சிங்கள அறிவிப்புகளில் குறைத்தும்; தமிழ் அறிவிப்பில் கூடுதலாகவும் வெளியிடப்பட்டிருக்கிறது!

அதாவது...(மன்னிக்கவும். ‘வீரபாண்டிய கட்டபொம்மன்’ திரைப்படத்தில் வெள்ளைத்துரையைப் பார்த்து கட்டபொம்மன்-சிவாஜிகணேசன், அதாவது...அதாவது... ...என்று கேட்ட ஞாபகம் வந்துவிட்டது!)

வயது வரம்பில் ஏற்பட்ட பிழை; அதிலும் முக்கியமாக தமிழ் அறிவிப்பில் இடம்பெற்ற பிழைக்குக் காரணம்... தமிழர் எவரும் புலமைப் பரிசில் பெறக்கூடாது என்பதுதானே? அருமையான கழுத்தறுப்பு!

— ஊடுருவி

## 8ம் கட்ட உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

வெலிக்கடைச்சிறையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து வரும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவாக யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் உண்ணாவிரதப் போராட்டத்தின் 8ம்கட்டம் நேற்று மாலை ஆரம்பமானது;

இதில் 8 மாணவிகளும் 13 மாணவர்களும் கலந்து கொண்டனர்.

(மா)


## புதிய வெளியீடுகள்

1, மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி —
ராஜேஷ் — நளினி
PYRAMID ORIGINAL

2. விஸ்வநாதன் வேலை வேண்டும்
ஊர்பாபு — கார்த்திக்
PYRAMID ORIGINAL

3. மச்சக்காளை
தியாகராஜன்

நல்லூர் வீடியோ சென்ரர்,

முத்திரச்சந்தை, நல்லூர்.

795


## மரண அறிவித்தல்

## Dr. K. பாலசுப்பிரமணியம்

Dr K. பாலசுப்பிரமணியம் 16-9-85 அன்று Botswana இல் காலமானார். இவர் ஈஸ்வரியின் அருமைக் கணவரும், காலஞ்சென்ற சகுந்தலா, மற்றும் பாலகுமார், சந்திரா, நளாயினி அவர்களின் அன்புத் தந்தையும், சுன்னாகம் ‘‘முதலியார் வளவு’’ காலஞ்சென்ற கதிர்காமர், பொன்னுப்பிள்ளை அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்ற அன்னலட்சுமி, இராஜரத்தினம் (புத்தூர்), செல்வத்துரை, சின்னத்துரை மற்றும் உடுப்பிட்டியிலுள்ள பரமேஸ்வரி இராமலிங்கம் அவர்களினதும் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற T இராமலிங்கம் (முன்னாள் பருத்தித்துறை பா. உ) அவர்களதும் கரணவாய் வடக்கு மீனாட்சிப் பிள்ளையினதும் அருமை மருமகனும், காலஞ்சென்ற சட்டத்தரணி K இராமலிங்கம் (உடுப்பிட்டி)இன் அன்பு மைத்துனரும். P இரகுநாதன் (கணக்காளர், Mackwoods Colombo), S. நிர்சிங்கம் (கணக்காளர், Saudi Arabia இன் அன்புச் சகலனும் ஆவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் (இன்று) 19-9-85 வியாழக்கிழமை Botswana இல் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் தயவு கூர்ந்து ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்:

R. பொன்னம்பலம்,
கரணவாய் வடக்கு,
வல்வெட்டித்துறை.

796

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

## இலங்கையில் போர் நிறுத்தம்—

# சர்வதேசகண்காணிப்புப் பிரிவு நிறுத்தப்படவேண்டும் – த. வி. கூ. கோரிக்கை

(சென்னை)

"இலங்கையில் போர்நிறுத்தத்தை மேற்பார்வையிட சர்வதேச கண்காணிப்புத் தேவை" என்று தமிழர் விடுதலைக் கூட்டணி தெரிவித்துள்ளது.

நேற்று சென்னையில் இக் கட்சியின் அரசியல்குழு கூடியது அப்போதே மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

"சர்வதேசகண்காணிப்புப் பிரிவொன்றை இலங்கையில் போர் நிறுத்தத்தைக் கண்காணிக்க நிறுத்தப்பட வேண்டும். எனவே இந்திய அரசு இக்கண்காணிப்புப் படையை இலங்கை அரசு அனுமதிக்கும் வகையில் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் த. வி. கூ. மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை த. வி. கூ. புதுடில்லி செல்லும் உடனடித் திட்டமெதுவுமில்லை என்று தெரிவிக்கப்பட்டது ஆயினும் இன்னும் சில தினங்களில் அது அங்கு செல்லலாம் என்று கூறப்பட்டது. (கி)

# வழிப்பறிக் கொள்ளை: அடுத்தவாரம் ஹர்த்தால்

(வவனியா)

வவனியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் இடம்பெற்று வரும் வழிப்பறிக் கொள்ளைச்சம்பவங்கள் தொடர்பாக யாழ். வர்த்தகர்கள் போர்க்கொடி உயர்த்தவுள்ளனர்.

இக் கொள்ளைச் சம்பவங்களைக் கண்டித்து அடுத்த வாரம் முதல் மூன்று நாட்களுக்கு கடையடைத்து ஹர்த்தால் அனுஷ்டிக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

கடந்த 14ம் திகதி மூன்று லட்சம் ரூபா பெறுமதியான உணவுப்பொருட்கள் உட்பட அனுமதிப்பத்திரம் பெற்ற ஒரு பெரல் டீசல், சைக்கிள் பல உதிரிப்பாகங்களுடன் ஆபத்தான தடைகளைத் தாண்டி வந்த யாழ்ப்பாணத்து லொறி ஒன்று புளியங்குளத்தில்வைத்து கொள்ளை அடிக்கப்பட்டதென்றும், இது போன்ற முன்னரும் பல தனியார் வர்த்தகர்கள் கொண்டுவரும் முக்கிய உணவுப்பொருட்கள் கொள்ளை அடிக்கப்பட்டிருக்கிறதென்றும் வர்த்தகர்கள் புகார்தெரிவிக்கின்றனர்.

இக்காரணங்களையிட்டு வாகனச் சொந்தக்காரர்கள் கொள்ளை அடிக்கப்பட்ட பொருட்களுக்குத்தாம் பொறுப்பில்லை என்று கூறிய பொழுதிலும் அவர்கள் ஒரு சங்கத்தை உருவாக்கி இக்கொள்ளைகளுக்கு எதிர்ப்பு நடவடிக்கை ஒன்றைமிகவிரைவில் மக்களுக்கும் அமைப்புகளுக்கும் எடுத்துக்காட்டப்போவதாக தெரிவித்துள்ளனர்.

கொள்ளை அடிக்கப்படும் பொருட்கள் யாவும் மக்களின் அத்தியாவசிய பாவனைக்குரிய பொருட்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வர்த்தகர்கள் தங்கள் போராட்டத்துக்கான காரணங்களைப் பின்வருமாறு தெரிவித்துள்ளனர்.

வழிப்பறிக்கொள்ளைகள் அதிகரித்துவருகின்றன. இதனால் மக்கள் கஷ்டமும் அதிகரிக்கின்றது. வடபகுதி வர்த்தகர்கள் கொள்வனவுசெய்து கொண்டுவரும் பொருட்களை வழியில் பறிகொடுக்கப்பட்டதினால் தொடர்ந்து தமது வியாபாரத்தைக் கொண்டு செலுத்தமுடியாமல் திண்டாடுகின்றனர். வழியில் நடக்கும் கொள்ளைகளுக்கு எவரும் உரிமை கோரமுன்வருவதில்லை, கொள்ளையர்கள், தமிழ் மக்களின் சுதந்திரத்தை பெற்றுத்தருவதாகக் கூறும் அமைப்புகளின் பெயர்களையே கொள்ளையின்போது உபயோகிக்கின்றனர், இந்த அமைப்புகள் யாவும் கொள்ளைகளைத் தாங்கள் செய்யவில்லை எனக் கைவிரிக்கின்றன, இதனால் பொது மக்களிடமும், வர்த்தகர்களிடமும், வாகனச்சொந்தக்காரர்கள் இந்த அமைப்புகளின்மீது வெறுப்புணர்ச்சி அதிகரித்து வருகின்றன, வர்த்தகர்கள் கடனுக்கும் காசோலைக்கும் கொள்வனவுசெய்த பொருட்கள் இப்படி வழிப்பறிக் கொள்ளைகளினால் இழக்கப்படுவதால் நஷ்டஈடு எப்படிப் பெறுவதென்று தெரியாமல் தத்தளிக்கின்றன. (மா)

# கொலையுண்ட 12 பேர் அடையாளம் காணப்பட்டனர்

(திருகோணமலை)

நிலாவெளியில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களில் பன்னிரண்டு பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் பெண்ணும்.

கொலையுண்ட ஏராளமானவர்கள் புதைக்கப்பட்டோ அல்லது எரிக்கப்பட்டோ இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. அடையாளம் காணப்பட்டவர்களின் விபரம் வருமாறு:

இ. துரைநாயகம் (35 வயது) செ. நிர்மலநாதன் (25) த புவிராஜா [17] வ. தர்மலிங்கம் (17), வ. மயூரராஜா [24) செ. இரத்தினராஜா (38), மா. இரஞ்சநேசன் (23] ச. மாணிக்கவேல் [45] மு கிருஷ்ணபிள்ளை (55), சி. மாரிமுத்து (50), சுப்பிரமணியம் (16), வேலுபொன்னம்மா (45)

# விற்பனை திணைக்களத்தில் கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

யாழ் கன்னாதிட்டியிலுள்ள வடபிராந்திய விற்பனைத் திணைக்களத்தில் பெறுமதிமிக்க பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

வானில் வந்த இளைஞர்கள் முன்கதவை உடைத்து உள்ளே சென்று துப்பாக்கிமுனையில் காவலாளியை பயமுறுத்திவிட்டு இக்கொள்ளையை நடத்தியதாகக் கூறப்படுகிறது.

ரோணியோ இயந்திரம், தட்டச்சு இயந்திரம் மணிக்கூடு, மின்விசிறி, தராசு மற்றும் சில பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. (க)

# புலோலியில் உண்ணாவிரதம்

(புலோலி)

சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களை விடுதலைசெய்யக் கோரி மேலைப்புலோலி நாவலர் சனசமூக அருகாமையிலும் தென் புலோலி காந்தியூர் சனசமூக நிலைய அருகாமையிலும் பொதுமக்கள் உண்ணாவிரதம் இருந்தனர்

இவ் உண்ணாவிரதத்தில் சிறுவர்கள் இளைஞர்கள், யுவதிகள் முதியோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர் பிற்பகல் 4 மணியளவில் குளிர்பானம் வழங்கி உண்ணாவிரதம் முடித்து வைக்கப்பட்டது.

இதனையடுத்துக் கருத்தரங்குகளும் இடம்பெற்றன பல பிரமுகர்கள் இக்கருத்தரங்குகளில் கருத்துரைகள் வழங்கினார்கள்

# ரூபா 4 லட்சம் கொள்ளை!

(வேலணை)

வேலணையில் உள்ள நிறைவேற்றுப் பொறியியலாளர் பெருந்தெருக்கள் திணைக்கள அலுவலகத்துக்குள் புகுந்த இனந்தெரியாத கோஷ்டியினர், காவலாளியைத் துப்பாக்கி முனையில் பயமுறுத்தி அலுவலக களஞ்சியஅறையிலிருந்து பெருந்தொகையான எஸ்பற்றஷ்ஷீட், கூரைத் தகடுகள், மரப்பலகைகள், தீராந்திவளைகள் மற்றும் பெருந்தொகையான இரும்புக்கம்பிகள் உட்பட பெறுமதிவாய்ந்த பொருட்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

களவுபோன பொருட்களின் பெறுமதி சுமார் நான்கு லட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

# வடமராட்சியில் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

(புலோலி)

வெலிக்கடைச் சிறையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவாக வடமராட்சி கிழக்குட பகுதியில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று மணற்காடு கிராமசபையிலிருந்து சிங்கம் முன்பாக ஆரம்பிக்கப்பட்டு நாகர்கோவில் மகாவித்தியாலயத்தில் முடிவுற்றது

பெருந்திரளான சிறுவர், இளைஞர், யுவதிகள், முதியோர் கலந்து கொண்ட இவ்வார்ப்பாட்ட ஊர்வலத்தில் பெண்களைதிகளை பலியல் வதைக்கு உட்படுத்தாதே" 'சிறைச்சாலையில் இருக்கும் இளைஞர்களை விடுதலைசெய் அல்லது விசாரணை செய் 'அரசியல் கைதிகள் அநாதைகளா?' போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இறுதியாக நாகர்கோவில் வித்தியாலயத்தில் கூட்டமொன்றும் நடாத்தப்பட்டது பலர் இக்கூட்டத்தில் உரையாற்றினார்கள்.

# இன்று

(யாழ்ப்பாணம்)

பண்ணை வெங்கடேசர் 5ம் திருவிழாவாகிய இன்று பகல் சுவாமி தேவிகளுடன் உள்வீதி வலம்வருதலோடு மாலை 6 மணிக்கு சுவாமி பூந்தண்டிகையில் எழுந்தருள்வார். (ச)

# உண்ணாவிரதம் 9-ம கட்டம்

(யாழ்ப்பாணம்)

வெலிக்கடைச் சிறையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவு தெரிவித்து கட்டம் கட்டமாக உண்ணாவிரதம் இருந்துவரும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் ஒன்பதாவது கட்ட உண்ணாவிரதம் இன்று மாலை ஆரம்பமாகவுள்ளது

உண்ணாவிரதமிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவாக யாழ் குடாநாட்டிலுள்ள கிராமங்கள் தோறும் அடுத்தவாரம் 26-ம் திகதி தொடக்கம் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் பயனுள்ள பாதயாத்திரையை ஆரம்பிக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

(இதசம்பந்தமான செய்திவை 4-ம் பக்கம் பார்க்கவும்)

# சுவர் விழுந்து குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

கொய்யாத்தோட்டம் புது வீதியில் உள்ள வீடொன்றில் விளையாடிக்கொண்டிருந்த 4 வயதுக் குழந்தை சரிந்து விழுந்த சுவருக்குள் அகப்பட்டு மரணமானது

நேற்றுப் பிற்பகல் இப்பரிதாப சம்பவம் இடம்பெற்றது. (மா)

# சுருக்கெழுத்து பாடநெறி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வட்டாரக் கல்வி மூலவள நிலையம் க. பொ. த. சாதரண பரீட்சையில் சித்தியடைந்து பாடசாலை விட்டு நீங்கியோருக்கான தமிழ் சுருக்கெழுத்து ஆங்கில சுருக்கெழுத்து ஆகிய பாடநெறிகளையும் க. பொ. த சாதாரண வகுப்பு படித்தவர்களுக்கான ஆங்கிலப்பாடநெறியையும் நடாத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளது

பயிற்சிகள் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகுமெனவும் கோப்பாய் வட்டாரக் கல்வி மூலவள நிலையப் பொறுப்பதிகாரி திரு எஸ் சி. எஸ் சிதம்பரநாதன் தெரிவித்துள்ளார்.

## சாட்டி புனித சித்தாத்திரை அன்னை திருவிழா

திருவிழா ஆரம்பம் 21-9-85 சனிக்கிழமை. திருநாள் திருப்பலி, சுருபபவனி 24-9-85 செவ்வாய்க்கிழமை காலை

திருப்பயணிகள் திருப்பதிக்கு வந்துபோவதற்கு வசதியாக போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

பொதுமக்கள் சார்பில் பகல் 10 மணிக்கு அன்னதானம்வழங்கப்படும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விளம்பர ஒழுங்கு:

அன்ரன் லக்ஷா ஜுவலேர்ஸ்
185/2 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். 801

## மரண அறிவித்தல்

### சாமுவேல் கொட்வின் நல்லதம்பி ஞானசெல்வம்

ஓய்வுபெற்ற யாழ். கச்சேரி நிர்வாக உத்தியோகத்தர் (Office Assistant) சமுவேல் கொட்வின் நல்லதம்பி ஞானசெல்வம் காலமானார் இவர் பூமலரின் அன்புக் கணவரும் பிரேமரஞ்சினி பிரேமகுமாரி பிரேமகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயன் சோமநாதரின் மாமனாரும் ஜெயகதன், சுதர்சன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை வியாழக்கிழமை இன்று 19-9-85 பி ப 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்

"பிரேம வாசா" த. சபாரத்தினம்.
உசன்
மிருசுவில் 807

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வைரவோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under namber B 10036/81 Eelanadu Po. Box: 49, Telegram: Eelanadu Telephone: 22389 — 24126